விலை: சதம் 25 தொலைபேசி: 23411

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, ஆவணி 27 உ (12 9-71) ஞாயிறு றஜபு பிறை 21 புத்தகம் 25 இதழ் 42

## ‘தமிழர் இரண்டாவது மொழியாக ஆங்கிலத்தையே கற்கவேண்டும்!’

‘தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழியான தமிழ்மொழியையே போதனு மொழியாகக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் உலக மொழியான ஆங்கிலத்தையே இரண்டாவது கட்டாய மொழியாக பயில வேண்டும்!

—இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார். அவர் மேலும் இது பற்றிக் கூறியதாவது;-

போதனுமொழிப் பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினை. தமிழ் மக்கள் தங்கள் தாய் மொழியான தமிழையே போதனு மொழியாக கட்டாயமாக வைக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் இந்நாட்டில் தமிழினமே அழிந்து விடும்.

இரண்டாவதுமொழியாக உலக மொழியான ஆங்கிலத்தையே நாம் படிக்க வேண்டும். உலகத்தில் பலஆண்டுகளுக்கு ஆங்கிலம் இருந்து வரும்; அதை மாற்ற முடியாது; அறிவுத்துறையில்



முன்னேறவும், உலகத்தோடு தொடர்பு கொள்ளவும் ஆங்கிலம் நமக்கு இன்றியமையாதது.

அதுமட்டுமல்ல, சிங்களப் பிள்ளைகள் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகப் படிக்கும்போது — நமது தமிழ் பிள்ளைகள் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகப் படிக்காவிட்டால் நாம் இருட்டுக்குள் தள்ளப்பட்டு விடுவோம். அறிவுத்

(11ம் பக்கம் பார்க்க)

## பதியுதீன்வடபகுதிவிஜயம்: தமிழரசார் பகிஷ்கரிப்பர்!

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் காட்டப்பட்டு வரும் பாரபட்சங்களையும் களைந்தெறிய கல்வியமைச்சர் பதியுதீன் மஹ்மூத் முன் வராவிடின் அவரது உத்தேச வடபகுதி விஜயத்தை தமிழரசுக்கட்சி முற்றுகப் பகிஷ்கரிக்குமென்று தெரிகிறது.

தமிழ் மக்களின் வெறுப்பையும் அதிருப்தியையும் அமைச்சருக்கு எடுத்துக்காட்டுவதற்காக தேவையானல் கறுப்புக்கொடி காட்டவும் தமிழரசுக்கட்சி தயங்காது என்று கட்சியின் உயர் தலைவர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

வடபகுதிக்கு கல்வியமைச்சர் பதியுதீன் மஹ்மூத் இம் மாத இறுதியில் அல்லது அடுத்த மாதம் விஜயம் செய்ய விருப்பதாக தினசரிப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்திருந்ததல்லவா? அமைச்சர் இப்படி ஒரு விஜயத்தை மேற்கொண்டால் தமிழரசுக்கட்சி எப்படி நடந்து கொள்ளும் என்று குறித்த தலைவரிடம் சுதந்திரன் நிருபர் கேட்டபோது அவர் கூறியதாவது:—

“பதியுதீன் மஹ்மூத் மீது எங்களுக்கு தனிப்பட்ட கோபம் எதுவுமில்லை; அவர் முஸ்லிம் சமூகத்துக்கு அதிக நன்மை செய்துவருகிறுர். அதிலும் எங்களுக்கு எவ்வித எரிச்சலுமில்லை; ஏனெனில் முஸ்லிமகளும் தமிழ்பேசும் இனத்தின் ஓர் அங்கம் என்று கருதுபவர்கள் நாங்கள்; எனவே முஸ்லிம்களுக்கு கிடைக்கும் அதிகப்படி சலுகைகளைக் கண்டு நாங்கள் ஆத்திரப்பட எவ்வித நியாயமுமில்லை.

(11ம் பக்கம் பார்க்க)

### பாகிஸ்தானில் கூட...!

வங்கதேசப் பிரச்சினையின் எதிரொலியாகப் பத்து இலட்சம் பேருக்கு மேல் கொலை செய்யப்பட்டும், பலகோடிப் பேர் கொடுமைப்படுத்தப்பட்டும்உள்ளபாகிஸ்தானிலேயே சென்றவாரம் பத்திரிகை வாய்ப்பூட்டு நீக்கப்பட்டு விட்டது. ஆனல்...............

..................... .................

### சோசலிசமாம் சோசலிசம்..!

அண்மையில் பொலிஸ் ரேடியோ இயக்குனர்கள் சேவைக்கான பரீட்சை நடைபெற்றது. இப்பரீட்சையில் 12 பொலீசார் தெரிவு செய்யப்பட்டனர். இந்தப் பன்னிரண்டு பேரில் ஒருவர் மட்டுமே தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கம்யூனிஸ்டுகளின் கரடி தமிழ் மக்களிடம் இனியும் செல்லாது!

### தலைமைப்பீடம் இதை உணர்ந்தது!

தமிழ் மக்களிடம் இனியும் தமது கரடி செல்லாது என்பதை கம்யூனிஸ்ட் தலைவர்கள் உள்ளூர இப்போது உணர்ந்து கொண்டு விட்டதாகத் தெரிகிறது. இதன் பயனுகத் தமிழ் மக்கள் மத்தியில் இனி தீவிர பிரசாரங்களை நடத்துவதில்லையென்றும் தங்கள் முழுக் கவனத்தையும் சிங்களப் பிரதேசங்களிலேயே செலவிடுவதென்றும், சிங்கள மக்களின் அபிலாஷைகளுக்கு அமையவே தங்கள்கட்சியின் நடவடிக்கைகளும் செயல் திட்டங்களும் கொள்கைகளும் இருக்க வேண்டுமென்றும் கம்யூனிஸ்ட்கட்சியின் உயர் மட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்,

இந்த முடிவின் எதிரொலியாக, தமிழில் வெளியிடுவதற்கிருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் பிரசார ஏடான ‘புதுயுகம்’ எனும் புதிய ஏடு சம்பந்தப்பட்ட வேலைகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளனவென்று அறியப்படுகிறது. ‘தேசாபிமானி’ ஏற்கெனவே பல மாதங்களுக்கு முன்னர் நிறுத்தப்பட்டு விட்டது தெரிந்ததே!

தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் கம்யூனிஸ்ட்டு

(11-ம் பக்கம் பார்க்க)

### விலைபோகாத விடுதலை வீரர்!

“ஈழத்தை இதுவரை ஆண்ட எல்லாப் பிரதமர்களுக்கும் டாக்டர் நாகநாதன் குடும்ப நண்பராகவும்-நெருங்கிய தோழராகவும் இருந்தார். டாக்டரை, பதவி, சுயநலம் ஆகிய விலைகளுக்கு வாங்கப் பல தடவைகள் ஆவிவோர் முயன்றதுண்டு. ஆனல் டாக்டர் நாகநாதன் ஓர் உணர்ச்சியான மனிதர்; அவரை யாருமே வாங்க முடியவில்லை.

கோழியை விலைக்கு வாங்கலாம். ஆட்டினை விலைக்கு வாங்கலாம்; மாட்டினை விலைக்கு வாங்கலாம். ஆனல டாக்டரை விலைக்கு யாராலும் வாங்கமுடியவில்லை — காரணம் அவர் மனிதராக இருந்தார் என்பதுதான்!”

—உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்,

## இ. போ. ச. பேருந்துகளில் திட்டமிட்ட தமிழ் ஒழிப்பு!

திட்டமிட்ட தமிழ் புறக்கணிப்பு வேலைகளில் இலங்கைப் போக்குவரத்து சபை இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

புதிதாக இ. போ. சபையினுல் தயாராக்கப்பட்டு பேருந்து வண்டிகளிளில் இடப்பட்டுள்ள பெயர்ப் பலகைகளில் தனிச்சிங்களம் அல்லது சிங்களமும் ஆங்கிலமுமே காணப்படுகிறது; தமிழ் முற்றுகப்புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழ் மக்கள் பெரிதும் தொல்லைகளுக்கு ஆளாகின்றனர்.

தலைநகரில் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ள அனேக பேருந்துகளில் தனிச்சிங்களமே தலைவிரித்தாடுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பேருந்து தரிப்புநிலைய அறிவித்தல்களும் பெரும்பாலும் தனிச்சிங்களத்திலேயே எழுதப்படுகின்றன.

ஒரு சமசமாஜ அமைச்சரின் கீழ்—சமசமாஜ வாதி

(2ம் பக்கம் பார்க்க)

### நிதியமைச்சருக்கு செல்வா வேண்டுகோள்

“சென்ற ஆண்டு வங்கியாளர் பயிற்சி நிறுவனம் தமிழில் வகுப்புக்கள் நடத்துவது பற்றி உங்களுக்கு கடிதம் எழுதியதோடு 2-11-70ல் நாடாளுமன்றத்திலும் இப்பிரச்சினை என்னுல் எழுப்பப்பட்டது.

போதிய மாணவர் இல்லாததனுலேயே இவ்வகுப்புக்களை நடத்த முடியவில்லையென்று அதற்குப் பதிலளித்தீர்கள். யான் உங்களுடன் மாறுபட்டு போதிய மாணவர்களும் விரிவுரையாளர்களும் உண்டென்றுபதிலளித்

(2ம் பக்கம் பார்க்க)

## ‘தி. மு. க. ஆட்சியில் தேனும் பாலும் ஓடவில்லை’

தமிழ்நாட்டில் தி: மு: கழக ஆட்சி நடக்கிறது; அங்கு சென்றல் இலங்கையிலுள்ளதைவிட இன்னும் வசதியுடன் வாழலாம் என்ற தவறுன எண்ணத்தில் இந்தியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்து இந்தியாவுக்கு செல்ல விரும்பும் மலையகத்தமிழர்களுக்கு, தி. மு. க. ஆட்சியில் தேனும் பாலும் ஓடவில்லையென்ற உண்மையை தமிழக அமைச்சர்களில் ஒருவரான திருமதி சத்தியவாணிமுத்து அவர்களே ஐயத்துக்கிடமின்றி தெளிய வைத்துள்ளார்;

சென்னை கோ[illegible] பத்தில் நடைபெற்ற [illegible]

### மலையகத் தமிழருக்கு ஓர் அறிவுரை!

என்.நவரத்தினம் பா.உ:வும் கலந்து கொண்ட கூட்டத்தில் அவர் பேசும் போது கூறியதாவது:—

கடல் கடந்து வரும் தமிழர்கள் — அந்த நாடுகளில் வாழ்ந்த வாழ்வே இங்கும் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியா?— என்று சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

தி: மு: கழகம் ஆட்சி செய்வதால் — நாங்கள் அமைச்சர்களாக இருப்பதால் இந்த நாட்டில் துன்பமே இல்லை; வறுமையே இல்லை; ஏழை என்பான் எவனுமில்லை என்று நாங்கள் கூற மாட்டோம்! நாங்கள் கடுமையாக உழைத்துப் பல முயற்சிகள் எடுத்து — ஓரளவு வறுமையைவிரட்டுகிறேம்-இன்னும் வறுமை இருக்கிறது; ஏழைகள் இருக்கிறுர்கள்; பாதையோரத்தில் வாழ்பவர்கள் இருக்கிறுர்கள்! குடிசைவாசிகள் இருக்கிறுர்கள்!

இப்படிப்பட்ட சமுதாயத்துடன் ஒன்றி வாழும் மனப்போக்கை அவர்கள் பெற்றிட வேண்டும்!

(11ம் பக்கம் பார்க்க)

### தினபதி செய்தி பச்சைப் பொய் என்கிறுர் தமிழரசுத் தந்தை

தமிழரசுப் பாராளுமன்றக் குழுக் கூட்டநிகழ்ச்சி பற்றி 8-9-71 தினபதி இதழில் முன் பக்கத்தில் வெளிவந்த செய்திகள் பொய்யும் புரட்டும் கற்பனையும் கலந்தவை யென்று தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் சுதந்திரன் நிருபரிடம் கூறினுர்.

“கல்வியமைச்சர்பதியுதீன் மாமூத் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும் பிரேரணையை ஊர்காவற்றுறை இரத்தினம் அன்றே முன்போ கொண்டு வரவில்லை. எனவே திரு. செல்லத்தம்பு அதனை எதிர்த்துக் கர்ச்சித்தார் என்பதும் கிழக்கு மாகாணப் பா. உ.க்கள் முன்பு எதிர்ப்புத் தெரிவித்தனர் என்பதும் பச்சைப் பொய்யாகும். தபால் தந்தி அமைச்சரை மட்டும் தான் கண்டிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்படவில்லை. அவரையும் கல்வியமைச்ச

(2ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# எண்ணம்

## தலைவர் தந்த திட்டம் செயலாக மாறட்டும்!

இந்நாட்டுத் தமிழ் தேசிய இனத்தின் ஒரேயொரு விடுதலை இயக்கம் இலங்கைத் தமிழரசுக் கட்சிதான் என்ற உண்மை யாராலும் மூடி மறைத்துவிட முடியாத ஒரு பகிரங்க ரகசியமாகும்:

தமிழரசுக்கட்சியின் கொள்கைகள் தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களில் அசைக்கமுடியாத அளவுக்கு ஆழப் பதிந்திருக்கின்றன.

தமிழரசுக் கட்சி ஊட்டிவரும் விடுதலை உணர்ச்சி—சுதந்திர தாகம்—உரிமை வேட்கை—தமிழ் இளைஞர்களின் நெஞ்சங்களில் எல்லாம் எரிமலை போல பரவிவருகின்றன.

தமிழரசுக் கட்சி தீட்டிய தியாக வரலாறு—இரத்தமும், கண்ணீரும், வியர்வையும் செறிந்த விடுதலைப் பாதை—தமிழ் மக்களுக்கு சோர்வையோ, சலிப்பையோ, வெறுப்பையோ தந்துவிடவில்லை. அதற்கு மாறாக, தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகள் இன்னும் தீவிரமாக அமையவில்லையே என்றுதான் தமிழ் இளைஞர்கள் இன்று குறைப்படுகிறார்கள்.

தமிழரசுக் கட்சியின் அந்தரங்க சுத்தியில்—இலட்சிய உறுதியில்—கொள்கை வீரத்தில்—தமிழ் மக்களுக்கு துளி கூடச் சந்தேகம் ஏற்பட்டது கிடையாது.

வன்னியசூரும், வீ. ஏ. கந்தையாவும், ஏகாம்பரமும், இராஜவரோதயமும், நாகநாதனும் தமிழ் இனத்துக்காக தங்கள் உயிரையே அர்ப்பணித்த தியாகம், தமிழ் மக்களின் உள்ளங்களில் அழுத்தமாகப் பதிந்துவிட்டிருக்கிறது.

தமிழரசு இயக்கத்திலே ஈடுபட்ட காரணத்துக்காக திருமலை நடராசனும், மலையகத் தோழர்கள் ஐயாவு, பிரான்சிசும், கொடிகாமம் 'ஐயாவும்' தங்கள் உயிரையே துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலியாகத் தந்த வீர வரலாறு தமிழ் இளைஞர்களின் இதயங்களிலேயிருந்து அழிந்துவிடவில்லை.

அண்மையில் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் இயற்கையெய்தினார் என்ற சேதி கிடைத்ததும், ஈழத்தமிழகம் முழுவதும் கதறியழுததும், கண்ணீர் வடித்ததும் கறுப்புக்கொடிகள் ஏற்றி துக்கம் அனுட்டித்ததும், வேறு எந்தத்தலைவருக்குமே இல்லாத அளவு இன்று வரை அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றிக்கொண்டிருப்பதும் தமிழரசுக்கட்சி தலைவர்கள் மீதும், தமிழரசுக்கொள்கைகள் மீதும் தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் ஆழமான பற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு தகுந்த எடுத்துக்காட்டன்றோ!

ஆம், தமிழரசுக்கொள்கை தமிழ் மக்களின் இரத்தத்தோடு இரத்தமாக—நாடி நரம்புகளில் எல்லாம் பிரிக்க முடியாதபடி இரண்டறக் கலந்துவிட்ட ஒரு கொள்கையாகிவிட்டது!

இதனால்தான், இன்றுகூட தமிழரசுக்கட்சி அடுத்து என்ன செய்யப்போகிறது என்பதை அறிவதில் தமிழ் மக்களும், ஏனையோரும் அதீத ஆர்வம் காட்டுகிறார்களே தவிர, ஆளுங்கட்சியின் எச்சில் கோப்பையை நக்கிவரும் தமிழ் பிரதிநிதிகளைப் பற்றியோ, தமிழ் மக்கள் மத்தியிலுள்ள சில்லறைக் கட்சிகளைப் பற்றியோ யாரும் அக்கறை காட்டுவதில்லை!

**தமிழ் மக்களின் ஈடிணையற்ற நம்பிக்கையையும் செல்வாக்கையையும் இத்தனைதூரம் பெற்றுள்ள தமிழரசுக்கட்சி, மக்களை நோக்கி இன்னும் இறங்கி வரவேண்டும்; மக்களோடு மக்களாக, மக்கள் இயக்கமாக அது மேலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்; இதற்கு வழிவகுக்கக்கூடிய வகையில் கட்சியின் அமைப்பு முறைகளில் ஏற்ற மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்; என்கின்ற நமது ஆசையை கட்சியின் பொதுச் செயலாளருக்கும் பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் இந்நேரத்தில் தெரியப்படுத்த விழைகிறோம்.**

இந்நோக்கத்துடன்தான் கட்சிக்கு ஓர் இலட்சம் உறுப்பினர்கள் திரட்டப்பட வேண்டும் என்றும் கட்சிப் பிரசாரம் வேகமாக நடைபெற வேண்டும் என்றும் சில கிழமைகளுக்கு முன் இப்பத்திகளில் கருத்து வெளியிட்டிருந்தோம். நமது அக்கருத்து வெளிவந்த பின்னர் கட்சித் தலைவர் திரு. சி. மு. இராசமாணிக்கம் அவர்கள் ஒரு தமிழ் தினசரிக்கு அளித்த பேட்டியொன்றில் பின்வரும கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

(1) கட்சி நிதிக்கு தமிழ் பொது மக்களிடமிருந்து 'ஒரு ரூபா நிதி' ஒன்றினைச் சேகரித்தல்.

(2) கட்சிப் பிரசார இயக்கத்தை தீவிரமாக்கல்.

(3) கட்சி தொண்டர்களையே வேட்பாளர்களாக நிறுத்தும் நிலையை ஏற்படுத்துதல்—இல்லாவிடில் சந்தர்ப்பவாதிகளாலும், பதவிப் பித்தர்களாலும், தியாகத் தழும்பில் வளர்க்கப்பட்ட தமிழரசுக்கட்சி சிதறடிக்கப்பட்டு விடும்.

(4) தமிழரசுக்கட்சிக்கென ஒரு சொந்த பணிமனையை நிறுவுதல்.

ஆகியவையே தலைவர் தந்த நான்கு திட்டங்களாகும். தலைவரின் இத் திட்டங்களை நாம் பூரணமாக வரவேற்கிறோம். இத்திட்டங்களை பேச்சளவில் விட்டுவிடாது, செயற்படுத்த உரிய நடவடிக்கைகளை தலைவர் இராசமாணிக்கமும் கட்சிப் பொதுச்சபையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

# 'இலங்கைத் தமிழர் நலன்பேண ஐ.நா.சபையில் தமிழ் நாட்டுக்கு அங்கத்துவம் இருக்கவேண்டும்'

## சிலம்புச் செல்வர் ம. பொ. சி. கருத்து

"இலங்கையுட்பட, கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழர்களின் நலன்களைக் கவனித்திட—அவர்களுக்காக குரலெழுப்ப—ஐ. நா. சபையில் தமிழ் நாட்டின் பிரதிநிதியொருவர் இடம்பெற வேண்டியதவசியம்."

—இவ்வாறு வற்புறுத்தியுள்ளார் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள். சென்னையில் நடைபெற்ற—நமது சாவகச்சேரி பா. உ. நவரத்தினமும் கலந்து கொண்ட—இளைஞர் பேரவைக் கூட்டத்தில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு வற்புறுத்தினார். சிலம்புச் செல்வர் மேலும் கூறியதாவது:—

கடல் கடந்த தமிழரின் பிரச்சினை நமக்குப் பெரிய பிரச்சினையானதற்குக் காரணம், இருபதாண்டுகளாக இருந்த தமிழ் நாட்டு அரசு—தமிழன் என்ற உணர்வோடு செயல்படாதது என்பது ஒரு காரணம்.

இன்னொன்று—பர்மாவும்—இலங்கையும் இந்தியாவும் ஒரு ஆதிபத்தியத்தின் கீழ்—வெள்ளையர்கீழிருந்த பகுதிகளாகும்.

எனவே, இங்கிருந்தோர் அங்கெல்லாம் சென்று பணியாற்றினார்கள்; வணிகத் தொழில் புரிந்தார்கள்!

அந்த நாடுகள் பிரிந்து சென்றபோது—சுதந்திரம் பெற்றபோது அங்குள்ள தமிழர்களின் நிலைபற்றி வற்புறுத்த பிரிட்டிஷ் அரசாங்கம் தவறிவிட்டது; அதைக் கேட்கச் சொல்ல காங்கிரஸ் தவறிவிட்டது.

சாதாரண சிறிய நாடான பிரான்சு—தனது பிரான்சு குடியுரிமை பெற்றவரின் உரிமையை நிலைநாட்ட ஒப்பந்தம் செய்து கொண்டது. அதுபோல் பிரிட்டிஷ் அரசாங்கம் செய்யத் தவறிவிட்டது.

அதனால் அவர்களைப் பாதுகாக்க யாரும் இல்லாமல் போய் விட்டார்கள்! பண்டிதநேரு—இலங்கைத் தமிழர் பிரச்சினை உங்கள் பிரச்சினை என்று கூறிவிட்டார், நாடற்றவர்கள்—என்ற பட்டத்தையும் அவர்களுக்குத் தந்தார்!

அதனால் நாடற்றவர்களை எப்படி நடத்த வேண்டுமோ—அப்படி இலங்கை அவர்களை நடத்தியது!

ஆகவே, இது தமிழகம்—தமிழர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாதலால்—தமிழகத்தின் ஒப்புதலோடுதான் இலங்கை—இந்திய ஒப்பந்தங்கள்—முடிவுகள் உரையாடல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்!

முன்புகூட சாஸ்திரி—சிறிமாவோ ஒப்பந்தத்தின் போது தமிழக அமைச்சர் ராமய்யா போனார். ஆனால் வராண்டாவில்தான் உட்கார்ந்திருந்தார். பேச்சுவார்த்தை முடிந்து—அவருக்கு ஒரு 'படி' தரப்பட்டது! அவ்வளவு தான்;

ஆனால்—இனி அப்படியில்லாமல்—குறைந்த அளவு தமிழக அமைச்சரவை—அதிக அளவு தமிழகச் சட்டமன்றம் இதுபோன்ற ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் தர வேண்டும்என்றநிலை தோன்ற வேண்டும்;

இலங்கையிலும்—மலேசியாவிலும் தமிழர்கள் அதிகமாதலால்—தமிழர் ஒருவரே இந்தியத் தூதுவராக இருக்க வேண்டும்!

இதுபோன்ற இனப் பிரச்சினைகள் இனியும் தோன்றும் என்ற அறிகுறி உண்டு. ஆகவே, சோவியத் யூனியன் தனது உறுப்பு நாடான உக்ரேனுக்கு—ஐ. நா. சபையில் இடம்கொடுத்து அதன் தனி கலாச்சார—நாகரிக அந்தஸ்தை உறுதிப்படுத்துவது போல் இந்திய நாடும்—தமிழகத்திற்கு ஐ. நா. சபையில் இடம் தந்திட வேண்டும்! அப்போது தான் வெளிநாட்டுத் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படும் வாய்ப்புக் கிடைக்கும்.

## நிதியமைச்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தேன். நீங்களும் பதிலுக்கு இதையொட்டி நடவடிக்கையெடுப்பதாக கூறினீர்கள்.

இவ்வாண்டு அக்டோபரில் வங்கியாளர் பயிற்சி நிறுவனம் மீண்டும் பயிற்சி வகுப்பு நடத்த இருக்கிறது. அதற்குரிய விளம்பரங்களையும் வெளியிட்டிருந்தீர்கள்; ஆனால் தமிழ் வகுப்புக்களைப் பற்றி யாதும் குறிப்பிடப்படவில்லை. இதன் பொருள் தமிழ் வகுப்புக்களை நடாத்தும் எண்ணம் மருந்தளவும் அவர்களுக்கில்லையென்பதாகும்.

வங்கியாளர் பயிற்சி நிறுவனம் நடாத்தும் தேர்ச்சிகளில் தோற்றுபவர்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் வழங்கப்படுகிறது. தமிழ்வகுப்பு நடாத்தாததனால் இவ்வாய்ப்புகளை தமிழ் ஊழியர்கள் இழக்கின்றனர்.

"நிதியமைச்சர் என்ற முறையில் உடனடியாக இதில் தலையிட்டு வங்கியாளர் பயிற்சிநிறுவனத்தை எல்லாசெய்தி இதழ்களிலும் தமிழ் வகுப்புக்கள் பற்றி ஏற்ற விளம்பரம் செய்து அக்டோபரில் தமிழில் வகுப்புக்களை நடாத்துமாறு கட்டளையிடும்படி வேண்டுகிறேன்.

—இவ்வாறு திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் நிதியமைச்சருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## இ. போ. ச. ...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

யான இ. போ. ச. தலைவரின் நிர்வாகத்தில் தமிழ் எப்படி [illegible] இது தகுந்த எடுத்துக்காட்டு அல்லவா?

## தினபதி செய்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரையும், நீதி அமைச்சரையும் மற்றும் பிற அமைச்சர்களையும் அவர்களின் அமைச்சுகள் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் அவற்றில் நடைபெறும் ஊழல்களையும் பாராளுமன்றத்தில் கண்டித்துப் பேச வேண்டுமென்றே முடிவு செய்யப்பட்டது;

"சில மாதங்களின் முன் நடந்த தமிழரசு செயற்குழுதான் கல்வியமைச்சு தமிழர்களுக்குப் பாதகமாகப் பல்கலைக்கழக தெரிவில் இழைக்கப்பட்ட அநீதிபோல தொடர்ந்து தமிழினத்துக்கு அநீதி செய்யும் முயற்சியில் ஈடுபட்டால் கல்வியமைச்சர் மீது நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வர வேண்டி வரும் என முன்பு முடிவுசெய்தது: நாங்கள் இப்பொழுதும் நிலைமையைப் பரிசீலித்து வருகிறோம்."

—இவ்வாறு செல்வா அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## சுதந்திரன் ஆசிரியருக்கு நவரத்தினம் கடிதம்!

பாரிஸ் மாநகரில் நடைபெறும் சர்வதேச பாராளுமன்ற மாநாட்டுக்கு சென்றிருக்கும் சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து சுதந்திரன் ஆசிரியருக்குப் பின் வரும் கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார்:

மீனம்பாக்கம் விமான நிலையம்
சென்னை;
27-8-71

அன்புள்ள மகேஸ்,

நான் இன்னும் சில நிமிஷங்களில் பம்பாய்க்குசெல்கிறேன். சென்னையில் நான் 4 தினங்கள் மிகவும் பிரயோசனமாகச்செலவழித்தேன். இத்துடன் இங்கு நடந்த சில கூட்டங்களின் குறிப்புகள் அனுப்புகின்றேன். கூட்டங்களில்பேசப்பட்டவை அத்தனையையும் இலங்கை பத்திரிகைகளில் அப்படியே போடுவது புத்திசாலித்தனமல்ல. முக்கியமாக ம. பொ. சி. மிகவும் உணர்ச்சி வசப்பட்டுபேசினார். டாக்டர் இ. மு. வீ. அஞ்சலி கூட்டத்தின் குறிப்பும் புகைப்படமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

நீங்கள் விரும்பியதை பிரசுரிக்கலாம். பாரிசில் இருந்து பின்னர் எழுதுகிறேன்.

இப்படிக்கு
வ. ந. நவரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியே ஓர் இனத்தின் முதுசொத்து

'பங்களாதேஷ் போராட்டத்திலிருந்து இந்தியா பெறவேண்டிய படிப்பினையும் உள்ளது. இப்போது நடப்பதுபோல ஹிந்தித்திணிப்பை தொடர்ந்து நீடித்தால் அது இந்தியாவை இரண்டாகப் பிளந்து விடும். அந்தந்த பிரதேசங்களில் பிரதேச மொழிகளுக்கு ஓரளவு சலுகை தந்து விட்டு, அகில தேச அடிப்படையில் ஹிந்தியை வலுக்கட்டாய முறையில் தொடர்பு மொழியாகவும், ஆட்சிமொழியாகவும் ஆக்கிவிடலாம் என்று நினைப்பது வெறும் கானல் நீர்; இது ஒரு நாளும் நடை முறைக்கு வராது. இந்த நடவடிக்கை சண்டையிலும் ஒழுங்கீனத்திலுமே கொண்டுவந்துவிடும்.

'பொதுவான ஒரு மதத்தை பின்பற்றும் மக்களும் மொழிப் பிரச்சினை காரணமாகப் பிரிந்து போவார்கள் என்று பங்களாதேஷ் நம் கண் முன் மெய்ப்பித்துக் காட்டி விட்டதைப் பார்த்துப் படிப்பினை பெறுவோமாக.

ஹிந்துக்களைவிட முஸ்லிம்கள் அதிக மத உணர்வு பெற்றவர்கள். இந்திய முஸ்லிம்களுக்கு இஸ்லாம் மதம்தான் முதல் முக்கியத்துவம் வாய்ந்த விஷயம்; அதற்குப்பிறகுதான் மற்ற விஷயங்களில் அவர்களுக்குப் பற்றுதல். இந்துக்களுக்கோ இவ்வளவு தீவிரமான மத உணர்வு கிடையாது.

உண்மையான மத ஈடுபாடு இல்லாமல் அர்த்தமற்ற சடங்குகளிலும் அதைவிட மோசமான போலித் தத்துவ வாதங்களிலும் பக்தியை மூடி மறைப்பவர்களே நம்மில் பெரும் பாலோர்.

**ஆனால் மொழி உணர்வு நமக்கு அதிகம். மொழி என்பது வலிமை வாய்ந்த ஒரு சக்தியாக நம்மிடையே நிலவிவருகிறது.**

'எனவே இந்தி மக்கள் அளவுக்கு மீறிய தவறான நம்பிக்கை கொண்டு தங்கள் மொழியை பலவந்தமாக திணிக்க முற்பட்டால் இந்தியா இந்திப் பகுதியென்றும் இந்திபேசாத பகுதி யென்றும் இரண்டாகப் பிளந்துபோகும் பங்களாதேஷைப்பார்த்து இந்த எச்சரிக்கையைப் பெறுவோமாக.'

—நண்பா, இப்படி 'ஸ்வராஜ்யா' எனும் ஏட்டில் அண்மையில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் எழுதியிருக்கிறார்!

ராஜாஜி அவர்கள் இந்தியாவுக்குக் கூறியிருக்கும் படிப்பினை — இந்தி பேசும் மக்களுக்கு தந்திருக்கும் 'உபதேசம்'— இந்தியாவுக்கு மட்டுமல்ல—பல மொழி பேசும் மக்கள் வாழும் எல்லா நாடுகளுக்குமே பொருத்தமானதன்றோ? ஒரு குறிப்பிட்ட மொழியை இன்னொரு மொழி பேசும் மக்கள் மீது திணித்திட முற்படுவோருக்கு எல்லாம் இது ஒரு எச்சரிக்கையன்றோ?

குறிப்பாக சிங்களத்தை இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் மீது திணித்திட முயலும் பெரும்பான்மை சிங்களத் தலைவர்களுக்கும் ராஜாஜியின் எச்சரிக்கை மிகவும் பொருத்தமானதாகவே காணப்படுகிறது.

இராஜத்துரோகி,
நாட்டுத்துரோகி,
பாகிஸ்தானின் பகைவன்,
குட்டிப் பூனை,
குட்டி சர்வாதிகாரி

இப்படியெல்லாம் ஏழரைக்கோடி வங்க மக்களின் தலைவர் ஷேக் முஜிபுர் மீது பாகிஸ்தான் சர்வாதிகாரி யெஹியாகான் [illegible] வந்தபடி பட்டம் சூட்டி வருகிறார்! இதில் ஒன்றும் ஆச்சரியமில்லைத்தான்! தங்கள் விடுதலைக்கும் சுயாதிபத்தியத்துக்கும் போராடுபவர்களை, ஆதிக்க புரியினர் அன்புக் கரம் நீட்டி அணைத்ததாக வரலாறே இல்லையே! அடக்கு முறை, அவச்சொல், சிறைவாசம், சித்திர வதை, தூக்குமேடை—இவைகள்தானே விடுதலை வீரர்களுக்கு கிடைத்திடும் பரிசுகள்! இந்தப் பரிசுகள் முஜிபுர் ரகுமானுக்கு அளவுக்கு விஞ்சி கிடைத்திடுவது ஒன்றே, அவர் ஓர் சுத்தமான விடுதலை வீரர் என்பதற்கு அடையாள முத்திரையன்றோ!

காந்தியார் இந்தியாவுக்கு சுதந்திரம் கேட்டபோது 'பைத்தியக்காரனின் உளறல்' என்றார்கள்; 'ராஜத்துரோகி' என்றார்கள்; யார் பைத்தியக்காரர் என்பதை இறுதியில் உலகம் கண்டுகொண்டது!

ஏன் நண்பா, இன்று அழிவின் விளிம்பில் நின்று கொண்டு ஆணவக்குரல் கொடுக்கிறாரே யெஹியாகான்—இவர் இன்று காப்பாற்றப் போவதாக கூறிடும் 'பாகிஸ்தான்' நாடு ஆரம்பத்தில் எங்கே உருவானது தெரியுமா? ஒரு கவிஞனின் கற்பனையில்! ஆம், கவி இக்பாலின் கற்பனையில் உருவானதுதான் பாகிஸ்தான். கவிஞன் இக்பால் பாகிஸ்தானைப் பற்றி கற்பனை செய்து கொண்டிருந்தபோது தமது இலட்சியத்தை பிற்கால பாகிஸ்தான் சிற்பியான ஜின்னாவிடம் ஒரு தடவை எடுத்துக் கூறினாராம். அதற்கு ஜின்னா என்ன பதில் கூறினாராம் தெரியுமா? ஓர் ஏளனச் சிரிப்புடன், 'இக்பால் ஒரு கவிஞன். கவிஞர்கள் எப்போதும் கற்பனையில் மிதப்பவர்கள்; அரசியலுக்கும் கற்பனைக் கவிஞர்களுக்கும் ஒத்துவராது; பாகிஸ்தான் இக்பாலின் அழகான ஒரு கற்பனை- ஆனால் நடைமுறை சாத்தியமற்றது; என்று கூறினாராம்!

ஆம் நண்பா, எந்த இக்பாலின் 'பாகிஸ்தான்' இலட்சியத்தை கவிஞனின் கற்பனை என்று ஜின்னா ஏளனம் புரிந்தாரோ, அதே இலட்சியத்தை உருவாக்கியவராக பின்னர் ஜின்னா மாறியதை உலக வரலாறு கண்டது!

## அரசியல் மடல்

இவற்றிலிருந்து புரிவது என்ன? விடுதலை உணர்ச்சி என்பது கேலிப் பேச்சினாலோ, கிண்டல் கணைகளினாலோ—அடக்கு முறைகளினாலோ—சிறைச்சாலை சித்திர வதைகளினாலோ—மக்களை கொன்று குவிப்பதாலோ—தூக்கு மரத்தில் தொங்க விடுவதாலோ அடக்கி விட முடியாத ஒரு பேருணர்ச்சி என்பதுதான்!

அடக்கு முறை அதிகரித்திட அதிகரித்திட—துன்பங்கள் மேலும் மேலும் துளைத்திட—விடுதலை உணர்வு மேலும் ஒளி விடும் சுடச் சுடரும் பொன்போல! அடக்கு முறை, சித்திரவதை, சிறைச்சாலை, தூக்கு மேடை போன்றவை விடுதலை ஆர்வத்தை மேலும் மேலும் ஓங்கி வளரச் செய்திடக் கூடிய 'விட்டமின்' சக்தி என்பதனை வரலாறு நமக்கு காட்டியிருக்கிறது!

'வங்கதேசம்' இன்று அடக்கு முறைக் குள்ளாகி, கண்ணீரும் செந்நீரும் சிந்தி—நெஞ்சு பதைத்திடும் எண்ணற்ற தியாகங்களை செய்து கொண்டு சுதந்திரத்துக்குப் போராடி வருகிறது. அம் மக்களின் விடுதலைப் போராட்டம் நியாயத்தை, நீதியை அடிப்படையாகக் கொண்டு இருப்பதனால் அந்த மக்களுக்கு நிச்சயம் சுதந்திர ஒளி கிடைத்தே தீரும்!

இந்த நேரத்தில் வங்கதேச சுதந்திரப் போராட்டத்துக்கு வித்திட்ட காரணங்களை நாம் எண்ணிப்பார்த்திட வேண்டும்; அது நமக்கும் பயன்படக் கூடியவை!

பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து 1947ம் ஆண்டு பிரிந்த பின்னர்—அதாவது 'சுதந்திரம்' பெற்ற பின்னர், வங்கமொழி பேசும் இனமும் அவர்களது பிரதேசமும் எப்படியெல்லாம் புறக்கணிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, வந்தன என்பதை நாம் சிந்தனையில் கொண்டிட வேண்டும்:

(1) ஏழரைக்கோடி வங்கமக்களின் தாய் மொழியாம் வங்கமொழியை ஆட்சிமொழியாக்க, தேசிய மொழியாக்க மறுக்கப்பட்டது. உருது மட்டுமே பாகிஸ்தானின் தேசிய ஆட்சிமொழியெனப் பிரகடனப்படுத்தியது பாகிஸ்தானின் முதல் அரசியல் நிர்ணய சபை — நமது நாட்டு அ. நி. சபை சிங்களம் மட்டுமே அரசகரும மொழியென ஏற்றுக் கொண்டிருப்பது போல! ஆக, வங்க மக்களின் மொழி, கலாச்சார உரிமைகள் மறுக்கப்பட்டன.

(3) 1950ம் ஆண்டிலிருந்து—கடந்த இருபது ஆண்டுகளாக வங்கத் தலைவர்களால் [illegible]ளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட-வங்கத்துக்கு சமஷ்டி அரசுக்குட்பட்ட மாநில சுயாட்சி வேண்டுமென்ற நியாயமான கோரிக்கை பாகிஸ்தான் ஆட்சிபீடத்தால் நிராகரிக்கப்பட்டு வந்திருக்கிறது.

# அதுவே விடுதலை உணர்வின் வித்து!

(3) வங்கப் பிரதேசம் மேற்கு பாகிஸ்தானியரின் சுரண்டல் பூமியாக மாற்றப் பட்டது! வங்க மக்களை பாகிஸ்தான் ஆட்சி பீடம் திட்டமிட்டு புறக்கணித்தும் பாரபட்சம் காட்டியும் நடத்தி வந்தது! அரசாங்க உத்தியோகங்கள், அரசாங்க சார்புடைய கூட்டுத்தாபனங்களின் வேலை வாய்ப்புகள், தொழில் செய்யும் உரிமைகள், போன்ற சகலவற்றிலும் வங்க மக்கள் ஒதுக்கி வைக்கப்பட்டார்கள்.

வங்க தேச விடுதலைப் போரின் அடி நாதமாக — மூலவேராக அமைந்தது வங்க மொழியுரிமைப் போராட்டம் தான்! மத ஒருமைப்பாடு என்னும் போர்வையின் கீழ் தங்கள் தாய்மொழியின் உரிமைக்கு வேட்டு வைக்கப் படுவதை வங்க மக்கள் ஏற்றிட மறுத்தனர்!

1948ம் ஆண்டு மார்ச் மாதம், "பாகிஸ்தான் ஒரு முஸ்லிம் நாடு. ஆகவே பாகிஸ்தானின் தேசிய மொழியாக இருக்கும் தகுதி உருது மொழி ஒன்றுக்குமட்டுமே உண்டு. வேறு எந்த மொழிக்கும் அந்த அருகதை கிடையாது—" என்று வங்க மக்களின் மொழியுணர்ச்சியை கிஞ்சிற்றும் பொருட்படுத்தாது டாக்கா பல்கலைக் கழகத்தில் வைத்து அறிவித்தார் பாகிஸ்தானின் தந்தையான ஜனாப் ஜின்னா. ஆம், இப்படிக் கூறியதன் மூலம் இன்றைய சுதந்திர வங்காளத்துக்கும் அன்றே அத்திவாரமிட்டவர் ஜனாப் ஜின்னாதான்!

—ஜின்னாவின் இந்த அறிவிப்பு வங்க மக்களை கிளர்ந்தெழச் செய்தது— வங்க மொழிக்கு உரிமை கிடையாதென்பதை அறிந்தவுடன் பொங்கும் புலியானார் அப்போது சட்டக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த ஷேக் முஜிபுர் ரகுமான்! அதுவரை ஜின்னாவின் வலது கரமாக இருந்த ரகுமான் தனது மொழியுரிமை காத்திட எதிரணி அமைத்தார்!

1952ம் ஆண்டு வங்க மொழி உரிமைப் போராட்டம் தொடங்கியது—வங்கம் முழுவதும் இரத்த ஆறு பெருக்கெடுத்தது! வங்க தேசிய உணர்வு பொங்கியெழுந்தது! தங்கள் பெருமை வாய்ந்த வங்க மொழி நசுக்கப்பட்டு ஒழிக்கப்பட்டு இரண்டாவது இடத்துக்கு தள்ளப்படுவதை வங்க மக்கள் சகித்துக்கொள்ள மறுத்தார்கள்.

மொழியுரிமை கோரி எழுந்த இந்த இயக்கத்தை நசுக்கிவிட பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் பூரண அடக்குமுறையை ஏவி விட்டனர்; துப்பாக்கியைத் துணைகொண்டனர்; ஆனால் வங்க மக்களோ துளியும் விட்டுக்கொடுக்கவில்லை— தியாகத் தீயில் குளித்தனர்; இரத்தத் தடாகத்தில் நீந்தி தமது மொழிப்பற்றை நிலைநாட்டினர்!

இந்த மொழிப் போரில் இருபத்திரண்டு வங்காள மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்! பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். சிறைச்சாலைகள் நிறைந்தன. எனினும் இத்தியாகம் வீண்போகவில்லை! வங்கமொழியும் பாகிஸ்தானின் ஒரு தேசிய மொழியென ஏற்றுக்கொள்ளப்பட்டது- நமது போராட்டத்தின் பயனாக தமிழ் மொழி விசேட விதிகள் சட்டம் இங்கு உருவாகியது போல்!

1952ம் ஆண்டில் நிகழ்ந்த இந்த மொழிப் போரின் தலைவனாக திகழ்ந்த முஜிபுர் ரகுமான் தான் இன்று வங்க தேசத்தின் எழுச்சியின் சின்னமாக விளங்குகிறார்! இந்த மொழிப் போரே வங்க விடுதலைப் போரின் ஆரம்பக் கட்டம்! இதன் பின்னர் இணைப்பரசுக்குட்பட்ட மாநில சுயாட்சி வங்கத்துக்கு வேண்டுமென்ற கோரிக்கையும் அங்கு வலுப் பெற்றது!

வங்க நாட்டு விடுதலைப் போருக்கான ஏனைய காரணங்களை மற்றோர் மடலில் பின்னர் விபரமாக எழுதுவேன்!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் முதல் கலைக்களஞ்சியம்: அபிதான கோசமல்ல; அபிதான சிந்தாமணியே!

**டாக்டர் சாலை இளந்திரையன்**

1970ல் வெளிவந்த ''சுடர்—அண்ணமலர்'' ரில் தமிழின் முதல் கலைக்களஞ்சியம் என்னும் கட்டுரைக் குறிப்பு ஒன்றும் இடம் பெற்றிருந்தது. ''1910ம் ஆண்டில் ஆ. சிங்காரவேலு முதலியார் அவர்கள் தொகுத்து வெளியிட்ட அபிதான சிந்தாமணியே தமிழின் முதல் கலைக்களஞ்சியம்'' என்று அறுதியிடும் அந்தக் கட்டுரைக்குறிப்பைச் 'சுதந்திரன்' மறுவெளியீடு செய்து சிறப்பித்தது.

திரு. இ. நாகராஜன் அவர்கள், ''ஈழத்து ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை அவர்கள் 1902ம்ஆண்டில்வெளியிட்ட அபிதான கோசமே தமிழின் முதல் கலைக்களஞ்சியம்'' என்று குறிப்பிட்டு,—அதற்கு ஆதரவாக, ஏற்கனவே வெளிவந்துள்ள இரண்டு கட்டுரைகளையும் 'சுதந்திரன்' ஆசிரியருக்கு அனுப்பியிருந்தார்கள். அந்தக் கட்டுரைகளில் ஒன்று, 2.11.62 'இந்து ஆர்கன்' இதழில் திரு. வி. முத்துக்குமாரசாமி அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியது; மற்றது, 21.3.68 'ஈழநாடு' இதழில் திரு. சி. பரம்தில்லை ராஜா அவர்கள் எழுதியது; நான் கேட்டுக்கொண்டதன் பேரில், அந்த இரண்டு கட்டுரைகளையும் 'சுதந்திரன்' ஆசிரியர் திரு. கோவை மகேசன் அவர்கள் என் பார்வைக்கு அனுப்பி உதவினார்கள்...

'சுடர்' அண்ணமலரில் இடம்பெற்றுள்ள 'தமிழின் முதல் கலைக்களஞ்சியம்' என்னும் கட்டுரைக் குறிப்பை 1969ல் எழுதிய போதோ அதனை 1970ல் வெளியிட்ட போதோ, திரு. இ. நாகராஜன் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ள இரண்டு கட்டுரைகளையும் நான் படித்திருக்கவில்லை; ''புதுத்தமிழ் முன்னோடிகள்'' என்னும் வரிசையில் நான் எழுதிவரும் நூல்களுக்கான குறிப்புக்களைச் சேகரித்தபோது,—

அபிதான சிந்தாமணியைப் படிக்கு முன்பே, 1902ல் வெளிவந்த அபிதான கோசத்தையும் 1908ல் வெளிவந்த சிறப்புப் பெயர் அகராதியையும் படித்தேன். (இவை சென்னையில் உள்ள மறைமலையடிகள் நூலகத்தில் உள்ளன.) மூன்று நூல்களையும் முழுமையாக ஒப்பிட்டுப் பார்த்தபிறகே, 'கலைக்களஞ்சிய முறையை முதன்முதலாகத் தமிழில்தோற்றுவித்தது அபிதான சிந்தாமணியே' என்ற முடிவுக்கு வந்தேன். 'சுடர்' மலர்க்கட்டுரையிலும் அதைப் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறேன்:

'அபிதான சிந்தாமணி உருவாகி வந்த காலத்திலேயே, இதனோடு ஒருவாறு ஒப்புமை உடைய வேறு இரண்டு நூல்கள் வெளிவந்தன. அவற்றுள் ஒன்று, யாழ்ப்பாணத்து ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் தொகுத்து (1902ல்) வெளியிட்ட அபிதான கோசம்; மற்றது ஈக்காடு இரத்தின வேலு முதலியார் அவர்கள் தொகுத்து (1908ல்) வெளியிட்ட சிறப்புப் பெயர் அகராதி; இவை இரண்டுமே அபிதான சிந்தாமணியைவிட அளவில் சிறியன; அவை பெரும்பாலும் இலக்கிய, புராணச் செய்திகளுக்கு அப்பால்உள்ள துறைகளைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

எனவே (1910ல் வெளிவந்த) அபிதான சிந்தாமணியே, தமிழின் முதல் கலைக்களஞ்சியமாகவும் அத்துறை ஓர்மையைத் தமிழரிடையே தோற்றுவித்த சிறப்புக்கு உரியதாகவும் விளங்குகிறது.''

மேலே குறித்த 'இந்து ஆர்கன்', 'ஈழநாடு' கட்டுரைகளில், '1886ல் பணி தொடங்கப்பட்டு 1902ல் வெளிவந்த அபிதானகோசம் இருக்கையில், 1890ல் பணி தொடங்கப்பட்டு 1910ல் வெளிவந்த அபிதான சிந்தாமணி தமிழின் முதல் கலைக்களஞ்சியமானது எப்படி?' என்னும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. கால முன்மையை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு கேள்வி எழுப்பும் இந்தக் கட்டுரையாளர்கள், ஒரு புத்தகத்தைக் கலைக்களஞ்சியம் என்று கணிப்பதற்கு அடிப்படையாக உள்ள அதன் பொருட்பரப்பைப் பற்றிப் பேசவே இல்லை.

தமிழ் இலக்கியப் பயிற்சிக்குப்பெருந்துணையாக உள்ள ஒரு பணியை முத்துத்தம்பிப் பிள்ளை அவர்கள் முதன்முதலில் செய்தார்கள் என்பதை எந்தத் தமிழனும் மறுக்கமாட்டான்; மறக்கவும் மாட்டான். ஆனால், அவருடைய அபிதான கோசம் ஓர் இலக்கியப் பொருள்விளக்க அகராதி என்னும் எல்லையைத் தாண்டிப் பிறதுறைகளை அளாவிப் படரவில்லை என்பதை நாம் மறந்துவிடுதலாகாது.

அணிகலன்கள், அசுவம் (குதிரை), அட்டசித்தி, அணிவகுப்பு, அரசு (மரம்) அவிநயம், ஆயுதம், இசை, இராஜதருமம், உணவு (வகைகள்), (இலக்கிய) உத்திகள், உற்சவம், எண்பேராயம், குழல், கூத்து (வகைகள்), சககமனம், மதங்கள், மரணம், மாட்டிலக்கணம், யாழ், மணி(கள்) முதலான பல துறைச் செய்திகளைப் பற்றி அபிதான சிந்தாமணி விரிவாகப் பேசுகிறது; அபிதான கோசத்தில் இவை இல்லை. அபிதானகோசத்தில் முதன்மை பெற்றுள்ள அகஸ்திய முனி, அகநானூறு, அதர்வ வேதம், ஈசுவரன், கங்காத்துவாரம், கஜானன், கம்பன், காவிரி, குழல்வாய்மொழியம்மை, சந்திரமதி, சரிமிஷ்டை, நம்பியாண்டார் நம்பி, பிரஜாபதி, புஷ்கரன், மௌத்கல்லியன், வாரணசி, வேதம், வேதாரணியம், வைரவக் கடவுள் என்பன போன்ற குறிப்புக்கள் அதனை ஓர் இலக்கிய அகராதியாகவே காட்டுகின்றன.

யாழைப் பழித்த மொழியம்மை (திருமறைக் காட்டிலே கோவில் கொண்டிருக்கும் தேவியார்), யாழின் மென் மொழியம்மை (திருமணஞ் சேரியில் எழுந்தருளியிருக்கும் தேவியார்) ஆகியோரைப் பற்றி விவரம் தரும் அபிதான கோசம், யாழின் வகைகளைப் பற்றியோ அதன் அமைப்பினைப் பற்றியோ பேசவில்லை. சமய இலக்கியங்களில் சுட்டப்படும் பல கோவில்களைப் பற்றியும் ஆங்காங்கு எழுந்தருளியிருக்கும் தெய்வங்களைப் பற்றியும் விவரங்கள் தருகிற அபிதான கோசம் உற்சவம் என்னும் பொதுத் தலைப்பில், உற்சவம் என்றால் என்ன என்ற விளக்கத்தைத் தரவில்லை.



அபிதானகோசம் தமிழின் முற்கால, இடைக்கால இலக்கியங்களில் பயின்றுவரும் இதிகாச, புராண, வரலாற்றுச் செய்திகளை மட்டுமே பேசுவதால், ஓர் இலக்கியப் பொருள்விளக்க அகராதி என்ற சிறப்புக்கு மட்டுமே அது உரியதாகிறது. அபிதானசிந்தாமணியோ, இலக்கியம் அல்லாத வேறு துறை

(10ம் பக்கம் பார்க்க)

## மானம் கெட்ட சாதி

''தமிழர்களின் வீடுகளில் பெரும்பாலும் தலையணை உறையில் 'GOOD NIGHT' 'GOOD LUCK' என்று ஆங்கிலத்தில் தையல் வேலை செய்து வைத்திருப்பதைக் காண்கிறோம். தலையணையில் கூட நாம் தமிழுக்கு உரிய இடம் தருகிறோம் இல்லையே — அரியணையில் தமிழுக்கு உரிய இடம் கேட்க நமக்கு அருகதை உண்டா? ஆங்கிலத் தலையணையில் தூங்குகிற தமிழா தூங்கடா! தூங்கு!!''

—காசி ஆனந்தன்

(புத்தூர் தமிழ் விழாவில் பேசியது.)




''அண்ணாவின் மடலெங்கே?''
அவசரமாய்த் தேடுகிறேன்,
'அன்புள்ள நண்பா' என
அழகுடன் மிளிர்கிறது!
வரிவரியாய்ப்படிக்கின்றேன்
வங்காளதேசத்தின் மக்களுக்கு
வரலாறு கூறி நிற்கும் வீரர்களுக்கு
பங்கம் விளைத்த பாகிஸ்தான் பாதகர்கள்
படுபாவிக் கூட்டங்கள்; எங்கள்,
மங்கையர்க்கு செய்த கொடுமைகளை
மானம் பறித்திட்ட பாதகத்தை,
அங்கம் துடித்து நிற்க; அணை கடந்த
அருவியெனக் கண்ணீர் பீறி நிற்க
எங்கள் அண்ணா கோவை
எடுத்துரைத்த வார்த்தைகளை
பொங்கும் குமுறலுடன் வாசித்தேன்; ஐயகோ!
''அயலவனைச்சகோதரனாய் நேசி'' என்னும்
அண்ணல் நபி போதனையைத்தினம் கூறும்
அன்புநெறி நாட்டினர்க்கா இக்கொடுமை?
சுதந்திரத்தைக்கேட்டதற்கு
சுயநிர்ணய உரிமையைக்கேட்டதற்கு
வங்காள விடுதலையைக்கேட்டதற்கு
வங்காள மக்கள் வதைக்கப் படுகின்றார்; ஐயகோ
எங்கள் தமிழ்மொழியின் உரிமை கேட்பதற்கு
இங்கும் இப்போர்க்கோலம் எழுந்தே தீரும்
எமக்கும் இந்நிலைமை வந்தே தீரும்
பொங்கும் மறத்தமிழர் கூட்டம் உள்ள வரை
போர்க்கோலம் ஈழம் கண்டே தீரும்
நெறியிழந்த பாகிஸ்தான் வெறியர்களின்
நிட்டூரம் அடக்கி அருள்நெறியைக்காட்ட
பறிபோன உரிமைகளை 'பங்ளா'வின்
சுதந்திரத்தை; வீர
வெறியோடு வெங்களத்தில் வெற்றிவாகை சூட
வங்காள மக்களுக்கு பலம் வேண்டும் ஈசா!
'வள்ளல் நபியே! பொறுத்தது போதும்
அள்ளியருள் கருணையினை அறம்தழைக்க' என்றே
உள்ளுரவேண்டுகிறேன்; அண்ணாகோவை
அள்ளி வழங்கும் சுதந்திர தாகத்தால்
அள்ளுண்டு திரண்டு வரும் லட்சோபலட்சம்
தெள்ளுதமிழ் வீரர்கள் உள்ள மட்டும்
தீந்தமிழும் இரத்தமொடு கண்ணீரும் கண்டபின்பு
திக்கெட்டும் ஈழமதில் பவனி வீசும்...!

—செல்வி. நோ. இராசம்மா
இராமகிருஷ்ண வீதி,
கல்முனை-2

● தண்ணீர் கட்டுப்பாடு, ● போக்குவரத்து முட்டுப்பாடு
● வாகன சேவை தட்டுப்பாடு போதுமே மக்கள் படும்பாடு!

# சேமமடு குடியேற்ற வாசிகள் படும் அவதி!

சேமமடு குடியேற்றத் திட்டம் தொடங்கி 15 வருடங்கள் ஆகிவிட்டன. அரசினர் ஏழை மக்களைக் கொண்டு வந்து குடியேற்றி விட்டார்களே ஒழிய அவர்கள் அனுபவித்து வரும் துன்பத்தை— சோகத்தைக் கண்ணெடுத்தும்பார்த்ததாகத்தெரியவில்லை. ஒரு புதிய கிராமத்திற்குப் போக்குவரத்து, தண்ணீர் வசதி, வாகன வசதி, மருத்துவ வசதி இருந்தால் தான் அந்தக் கிராம மக்கள் வளத்தாலும் வனப்பாலும் முன்னேற முடியும். மற்றக் கிராமங்களைப்போல் வளர்ச்சியும் உயர்ச்சியும் அடைய முடியும்.

### வீதி

இக்கிராமத்தில் 200 குடிகள் 15 வருடங்களுக்கு முன் குடியேற்றப்பட்டது. ஆனால் இன்றோ பல்கிப் பெருகி சுமார் 5000 மக்கள் வசிக்கிறார்கள். இவ்வளவு மக்கள் இருந்தும் என்ன? இக்கிராம மக்கள் இங்கிருந்து ஓமந்தை பிரதான வீதியை அடைய சுமார் 8 மைல்கள் செல்ல வேண்டியுள்ளது. இவ்வெட்டு மைல்றோட்டு கிடக்கும் நிலை தொல்லுந்தரமன்று. மாரி காலம் என்றால் சேற்றிலும் சரியிலும் உருண்டு பிரண்டே போக வேண்டும். பெரும் மழை என்றால் அதோ கதி?

### பஸ் சேவை

இங்கு வாழ் மக்கள் வவுனியா செல்ல வேண்டுமென்றால் காலையில் எழும்பி வண்டில் மாடு கட்டியோ அல்லது சைக்கிளில் சென்றோ அல்லது கால்நடை மூலமோ ஓமந்தை சென்றுதான் போக வேண்டும். இங்கு இலங்கை போக்குவரத்து சேவையினரின் கருணையும் இல்லை. வான்காரர் (Van)களின் கவனமும் இல்லை. இந்த நிலையில் எமது மக்கள் என்ன செய்வார்கள்? எந்தவித போக்குவரத்து வசதியும் இல்லை. அரசினரே எமது நிலை பரிதாபம்!

### வைத்திய வசதி

இங்குள்ள மக்களுக்கு வயிற்றுவலி வந்தால், கடும் நோய் கண்டால் கடுகி நடந்து நகரை அடைய ஓமந்தை செல்ல வேண்டும். இவ்விடைக்குள் நோயாளியின் சரித்திரம் முடிந்த கதையும் உண்டு. கர்ப்பிணிகளை வண்டில் கட்டி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்கையில் இடையில் பிறந்ததும் உண்டு. வருத்தம் முற்றி இறந்ததும்உண்டு இங்கு ஒரு நிரந்தர வைத்திய சாலை இல்லை. வாரத்திற்கு ஒரு அப்போதிக்கரி கொண்டு வருவார் சவர்க்காரப் பெட்டி: அதற்குள் மருந்துப் புட்டி, மருந்து கொடுப்பார். அத்தோடு அந்தக் கிழமையில் வைத்தியம் முடிந்த கதை. என்ன செய்வது! என்று வழியறியாமல் வகையறியாமல் திகைக்கிறோம்! பதைக்கிறோம்!

கலிங்கு மட்டம்.

ஒருவனுக்கு பணம் இல்லாவிட்டால் அவன் பிணம் என்பார்கள். பொருளாதார ரீதி

**ச. நல்லையா**

யாக எடுத்துக் கொண்டால் எமது மக்கள் விவசாயத்தையே முழுக்க முழுக்க நம்பி இருப்பவர்கள். ஒரு குளம். அதற்குப் பெயர் சேமமடுக் குளம். காலபோக வேளாண்மை செய்வார்கள். குளத்தில் தண்ணீர் சிலகாலம் தட்டுப்பாடு. சிலகாலம் கட்டுப்

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




டீ: வீரசிங்கம்,
வத்தளை.

கே: தமிழ் அரசுக்கட்சியின் தலைவரும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் முடி சூடா மன்னருமாகத் திகழும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் பிறந்த நாள் எப்பொழுது?

ப: மார்ச் 31ம் திகதி!

ஃ

வீர. வேலாயுதம்,
உடப்பு.

கே: இன்றைய ஜனநாயகத்தின் முக்கிய அம்சம் என்ன?

ப: நூறுபேர் உள்ள ஒரு சபையில் தொண்ணூறுபேர் காக்காய் வெள்ளை நிறம் என்று கூறி கையை உயர்த்திவிட்டால், உடனே காக்காய் வெள்ளை என்று தீர்மானம் போடுவது!

ஃ

சந்திரநாதன்,
சண்டிலிப்பாய்.

கே: உடுவில் தொகுதியில் ஒருவர் தேர்தலின் போது வாலிப முன்னணி என்றும் இடையில் நாம் இலங்கையர் இயக்கமென்றும், இப்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக் கிளைத்தலைவரென்றும் கரணமடித்தபடியே இருக்கிறாரே இது எதில் போய் முடியும்?

ப: பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அல்லது அரசியல் தற்கொலையில்!

ஃ

பொ. வே. திசவீரசிங்கம்,
மருதானை.

கே: அரசாங்கத்தால் வெளிநாட்டு மகாநாடுகளுக்கு சாவகச்சேரி பா. உ. வி. என். நவரத்தினம் மட்டும் ஏன் அனுப்பப்படுகின்றார்; எங்கள் தமிழ் காங்கிரஸ் பா. உ. களில் ஒருவரை அனுப்பினால் என்ன?

ப: ஏன், வெளிநாடுகளிலும் சென்று எச்சில் கோப்பைகளை நக்கவா?

ஃ

சி. நடராசா,
மீசாலை வடக்கு.

கே: பலாலியில் மாட்டினுக்கு மாலை போட்டவர்கள் தமிழரசு ஆதரவாளர்களா? அல்லது காங்கிரஸ் ஆதரவாளர்களா?

ப: பணப்பெட்டியின் ஆதரவாளர்கள்!

ஃ

ஊஷாநாதன்,
அக்கரைப்பற்று.

கே: இளம் பெண்கள் குட்டைப் பாவாடை அணிவதனால் அவர்களுக்கு என்ன பிரயோசனம்?

ப: அவர்களுக்குப் பிரயோசனமில்லாவிட்டாலென்ன? வாலிபர்களின் கண்களுக்கு பிரயோசனப்படுகிறதே. அது ஒன்றே அவர்களுக்குப் போதாதா?

ஃ

அ. ப. காண்டீபன்,
சாவகச்சேரி.

கே: நல்லூர் முன்னைநாள் பா. உ. அமரர் இ. மு. வி. நாகநாதன் அவர்களின் பூதவுடலை நல்லூருக்குக் கொண்டு வந்து அடக்கம் செய்யாததன் காரணம் என்ன?

ப: அமரர் நாகநாதன் குடும்பத்தினர் பின்பற்றி வந்த மத முறைப்படி கணவனுக்கு அருகிலேயே மனைவியும் இறந்த பின்னர் புதைக்கப்பட வேண்டும். நாகநாதன் அவர்களின் மனைவியாரோ யாழ்ப்பாணத்துடன் தொடர்பற்றவர். கொழும்பில் வாழ்பவர். எனவே அவரது வசதிக்காக, அவரது விருப்பப்படியே கொழும்பில் அடக்கம் செய்யப்பட்டது!

ஃ

நா. க. குமாரதாசன்,
நீர்கொழும்பு.

கே: காவடிச் சாமியார் (சிங்கள) பக்த நந்தனார்—'கிலா' சிறீ தியாகராச துரோக சாமியார் பற்றி நினைக்கும்போது அம்மையாருக்கு என்ன தோன்றும்?

ப: தன் வீட்டு மலம்தின்னும் நாயின் நினைவு மனதில் தோன்றும்!

ஃ

எஸ். கந்தசாமி,
பருத்தித்துறை.

கே: மலையகத்தில் தமிழரசுக் கட்சிக் கிளைகள் நிறுவ பொதுச் செயலாளர் நடவடிக்கை யெடுப்பாரா?

ப: மலையகத்தில் கட்சிக் கிளை நிறுவவேண்டுமென்று தமிழரசுப் பொதுச் சபை தீர்மானித்தால் நிச்சயம் நடவடிக்கை யெடுப்பார்!

ஃ

எஸ். ஆர். எஸ்.
தமிழ்ச் சாந்தா
யாழ்/வேரவில்.

கே: டாக்டர் நாகாவின் ஆவி எவ்வழிதேடிச் செல்லும்?

ப: தமிழ்த் துரோகிகளை பழி வாங்கத் துடிக்கும்!

ஃ

கோ. கிருஷ்ண மூர்த்தி,
விஜயகபுரம்,
திருக்கோவில்.

கே: அநீதி இழைக்கும் பெரும்பான்மை இனத்துக்கு வால்பிடித்து திரியும் தமிழ் எம். பீ. க்கள் தமிழினத்தின் நலனுக்காகவா சுயநலத்துக்காகவா பாடுபடுகிறார்கள்?

ப: கடைந்தெடுத்த சுயநலத்துக்காக!

ஃ

க. புண்ணியநாதன்,
4ம் யூனிற், மல்லாவி.

கே: ஆனந்தசங்கரி கட்சி விட்டு கட்சி மாறுவதன் நோக்கம் என்ன?

ப: விலை மாது ஒருத்தி அடிக்கடி ஆடவரைமாற்றும் காரணம் என்ன?

ஃ

யோ. செல்வநாயகம்,
வவுனியா.

கே: தமிழர் வதியும் மாவட்டங்களில் ஒவ்வொரு ஊருக்கும் பல ஸ்ரீலங்கா கிளைகள் திடீர் திடீரெனத் தோன்றுகிறதே இதன் மர்மம் என்ன?

ப: அதிகாரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இருக்கு மட்டும் இப்படியான வேடிக்கைகள் நடந்துகொண்டுதானிருக்கும்—அதிகாரம் இழந்ததும், கிளைகள் இருந்தஇடத்தில் புல் முளைத்துப் போய்விடும்!

கே: சினிமா விளம்பர பிரமுகரைப் பற்றி இவ்வார்த்தைகள்!

ப: இம்மாதம் 28ம் திகதியுடன் அவர் சுருண்டு படுத்துவிடுவார்!

ஃ

தமிழரசன்,
கீழ் கரவை.

கே: தமிழ் காங்கிரஸ் கட்சி ஒழிப்பு மாநாடு எங்கே எப்போது?

ப: அந்த மா நாட்டுக்கு தேதி குறிப்பது பற்றி இப்போது தீவிரமாக ஆலோசித்து வருகிறார்களாம். ஆனந்தசங்கரி, தியாகராசா, அருளம்பலம், பருத்தித்துறை நடராசா ஆகியோர்!

ஃ

என். மோகனகுமார்
புங்குடுதீவு

கே: தமிழரசு பா. உ. க்கள் தங்கள் கட்சிப்பொதுச் செயலாளருக்கு மரியாதை கொடுத்து நடக்கிறார்கள் அல்லவா? அது போல காங்கிரஸ் பா. உ.க்கள் சிவசிதம்பரத்துக்கு பணிந்து நடப்பதில்லையே... அது ஏன்?

ப: அதுதான் அவர்களது கட்சியின் இலட்சணம்! அது சரி... தமிழ் காங்கிரஸ் பா. உ.க்கள் இப்பொழுதும் காங்கிரசில்தான் இருக்கிறார்களா?

ஃ

ஆ. தயானந்தன்
பண்ணாகம்

கே: வட்டுக்கோட்டைத் தியாகராசா இப்போது என்ன செய்கிறார்?

ப: குமார சூரியர் தமக்குப் போட்டியாக வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு வரவிருப்பதை யறிந்து இடி விழுந்து போயிருக்கிறாராம்!

ஃ

கேணிவண்ணன்,
நெடுங்கேணி.

கே: சுதந்திரன் ஆசிரியருக்குச் சோதிடம் தெரியுமா? எதிர்காலத்தில் நடக்கப் போவதைமுன்கூட்டியேகூறி விடுகின்றாரே?

ப: ஆமாம், அவர் அரசியல் சோதிடத்தில் வல்லவர்!

ஃ

வே. தேவராஜ்,
கருக்குப்பனை.

கே: தினபதியார் நடத்தும், எம். ஜி. ஆர், சிவாஜி போட்டி நிகழ்ச்சியைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: அப்பாவி ரசிகர்களை மோதவிட்டு பத்திரிகை விற்பனையைப் பெருக்க முயலும் தந்திரம்தான்!

ஃ

மு. ஞானசெல்வம்,
வவுணதீவு.

கே: சிமோல் அருளம்பலம், காவடி தியாகராஜா, ஆனந்தசங்கரியார், மட்டக்களப்பு முட்டாள் போன்ற தமிழ்த் துரோகிகளை தமிழ் மக்கள் இனிமேலாவது ஒதுக்கி வாழ்வார்களா?

ப: அந்த உணர்ச்சி தமிழ் மக்களுக்கு வந்துவிட்டால் தமிழினம் விடுதலையடைவதை யார்தான் தடுக்க முடியும்?

ஃ

கலையழகன்,
வவுனியா.

கே: அரங்கமென்னும் பாராளுமன்றத்தில் சிறப்பாக நடிக்கவல்ல தமிழ் எம். பி. க்கள் யாவர்?

ப: வடக்கிலிருந்து வந்த ஐந்தும் (இதில் ஒன்று பின் கதவால் நுழைந்தது) கிழக்கிலிருந்து வந்த மூன்றுமாகச் சேர்ந்து எட்டு பேர். அதாவது அட்டமத்துச் சனியன்கள்!

ஃ

த. மலர்,
அளவெட்டி.

கே: வட்டுக்கோட்டை எட்டப்பன் எம் தியாகச் சுடர் நாகாவுக்கு அனுதாபம் தெரிவிக்காததேனோ?

ப: அந்த எட்டப்பன் அனுதாபம் தெரிவித்திருந்தாலும் எங்கள் வீரத் தலைவர் நாகாவின் ஆத்மா அதை ஏற்றுக் கொண்டிருக்காது!

கே: தமிழருக்கு குழி பறிக்கும் அரசியல் சாசனம் உருவாகிய நேரத்தில் மக்கள் தொண்டன் என்று தம்பட்டம் அடிக்கும் வ. பொ. வாய்மூடி மௌனியானதேனோ?

ப: அவர் சிங்கள மக்கள் தொண்டன் என்பதனால்!

தாசன்,
தெல்லிப்பழை.

கே: எல்லோரும் சமம் என்று கூறும் கம்யூனிஸ்ட் பிரமுகர் ஒருவர் தனக்கு வருத்தம் வந்தவுடன் மாத்திரம் ஏன் ருசியா சென்றார்?

ப: அதுதான் அவரது சம (அ) தர்மம்!

ஃ

வசந்தி செல்வநாயகம்,
நொச்சிமோட்டை.

கே: சுயநலத்துக்காகவும் பட்டம் பதவிக்காகவும் அம்மா கட்சியில் சேர்ந்து சாமரை வீசி வரும் எட்டப்பர்கள் தற்போது என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள்?

ப: சாப்பாட்டு மேசையைச் சுற்றி சடுகுடு ஆட்டம் ஆடுகிறார்கள்—எச்சில் இலையை யார் முதலில் நக்குவதென்று! எலும்புத் துண்டை யார் முதலில் எடுப்பதென்று!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194ஏ, பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

# அழுகின்றேன்



— சிற்பி —

அழுகின்றேன் அழுகின்றேன் அழுதின்னும் முடியவில்லை
ஒழுகுகின்ற கண்ணீரை ஒழித்திடவே முடியவில்லை.

சிங்களர் தமிழருடன் சோனகர் பறங்கியரும்
சேர்ந்து கலந்து சிறப்புடனே வாழ்வதற்குச்
சமஷ்டி அமைப்பொன்றே சரியான வழியென்ற
சயெம்வீ நாகநாதனை யெண்ணி நான் இன்னும்

அழுகின்றேன் அழுகின்றேன் அழுதின்னும் முடியவில்லை
ஒழுகுகின்ற கண்ணீரை ஒழித்திடவே முடியவில்லை.

மானம் பெரிதென்றும் மண்ணே உயிரென்றும்
வானம் அதிர வலிமைக் குரல் கொடுத்து
விழியான மொழி காக்க வீரமுடன் போரிட்டு
விழுப்புண் பல பெற்ற விறல் மறவன் தனையெண்ணி

அழுகின்றேன் அழுகின்றேன் அழுதின்னும் முடியவில்லை
ஒழுகுகின்ற கண்ணீரை ஒழித்திடவே முடியவில்லை.

ஐம்பத்தாறும் ஆண்டு ஆனி ஐந்தாம் தேதி
அன்னை தமிழ் மொழியை ஆட்சியினர் தாழ்த்துகின்றார்
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டோடு தமிழர் பலர்
கூடியிருக்கின்றார் குமுறி யெழும் நெஞ்சுடனே
காலி முகத் திடலில் காடையர்கள் தாக்குகின்றார்
கலக்கம் சிறிது மின்றிக் காளையெனத் தலை நிமிர்ந்து
அடிகள் உதைகள் அவமானச் சுடுசொற்கள்
அனைத்தையுமே தாங்கிய நம் அஹிம்சை வீரனையெண்ணி

அழுகின்றேன் அழுகின்றேன் அழுதின்னும் முடியவில்லை
ஒழுகுகின்ற கண்ணீரை ஒழித்திடவே முடியவில்லை.

சரித்திரத்திலே நல்லூர் சங்கிலி மன்னனின் கோட்டம்
சைவப் பழங்களுக்குச் சண்முகனின் திருக்கோவில்
வண்ணத் தமிழின் வசன நடையழகை
எண்ணுகின்ற பேர்களுக்கு நாவலர்தான் நல்லூராம்
அல்லும் பகலும் அருந்தமிழர் நலம் விழைவோர்
நல்லூர் என்றவுடன் 'நாகா'வையே நினைப்பர்
நல்லூரின் முத்து; நாம் பெற்ற சம்பத்து
எல்லோருமே போற்றும் உயர்குணப் பூங்கொத்து
தமிழரசுக் கட்சியின் தலையாய வித்து
அமிழ்தத் தமிழ்குடியின் அரிய பெருஞ் சொத்து
இத்தகைய பெருமைக்கு இலக்காகி விட்டெங்கள்
இதயங்கள் ஓலமிட 'இரும்பா' நீ எங்குசென்றாய்
ஈழத் தமிழ்மக்கள் ஏற்றமுடன் வாழ்வதற்கு
இன்னுயிரைத் தம்முடலை எல்லாவற்றையும் வேள்வித்
தீயினிலே பொசுக்கிவிட்டுத் தியாகிகளாய் மாறிவிட்ட

தாயனைய தலைவர்தமைத் தரிசிக்க சென்றாயா?
வன்னியனார் தம்முடனே வா வென்றழைத்தாரோ?
இன்றே வா என்றாரோ இராசவரோதயனார்?
வீ. ஏக் கந்தையா விரைவில் வா என்றாரோ?
ஏகாம் பரனாரும் என்னிடம் வா என்றாரோ?
கண்ணீரைச் செந்நீரைக் காலமெல்லாம் சிந்திவிட்டு
எண்ணியதைக் காணாமல் ஏகிவிட்ட உனையெண்ணி

அழுகின்றேன் அழுகின்றேன் அழுதின்னும் முடியவில்லை
ஒழுகுகின்ற கண்ணீரை ஒழித்திடவே முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எதிர்பாராத முடிவு எனக்கு ஏற்பட்டால் என் கல்லறையில் எழுதப்படவேண்டியதென்ன?'

## கலைஞர் கருணாநிதி உருக்கமான உரை!

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியை கொலை செய்வதற்கு திட்டமிட்ட சதிகள் பல தமிழகத்தில் நடைபெற்றுவருவதாக சொல்லப்படுகிறதல்லவா? அப்படி எதிர்பாராத முடிவு ஏதும் தனக்கு ஏற்படுமாக இருந்தால், தனது கல்லறையில் எழுதப்பட வேண்டியதென்ன என்பதைப் பற்றி கலைஞர் கருணாநிதி அவர்கள் உள்ளத்தை உருக்கும் வகையில் கூறியிருக்கிறார்.

மதுரையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் அவர் இது பற்றிக் கூறியிருப்பதாவது:—

**வன்முறைகளால் மக்கள் மன்றத்திலே வெற்றி பெற்றுவிட முடியுமென்று நினைப்பது சரியல்ல. அதற்குப் பக்குவப்பட்டமண் தமிழ்மண் அல்ல. சீனத்திலே அந்த முறை வெற்றி பெற்றிருக்கலாம்; சீனத்து மண்ணிலே அதற்கு வெற்றி கிட்டியிருக்கலாம்; ஆனால் தமிழ் நாட்டு மண் அப்படிப்பட்ட மண் அல்ல. இந்தத் தமிழகத்து மண்வாகு அறிந்து நாம் நடந்து கொண்டதால் தான் திராவிட முன்னேற்றக் கழகம் மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கிறது!**

இந்தத் தமிழகத்து மண்ணில் வேற்று நாட்டு மண்ணைக் கலந்து கொடியேற்றி விடலாம் என்று கருதினார்கள்; கருதி அந்த விதைகளைத் தூவினார்கள்: ஆனால் அந்த விதை கருகிவிட்டதே தவிர கொடி எழுவதற்கான முளைகூட விடவில்லை.

வேண்டுமானால் ஜனநாயக ரீதியில் எங்களை அழித்து விடுங்கள்! ஜனநாயக ரீதியில் எங்களைச் சந்தித்து—மக்களின் வாக்கினைப் பெற்று அழித்து விடுங்கள்.

இன்றையதினம் ஜனநாயக ரீதியில் இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி அழிக்கப்பட்டிருக்கிறது: அதற்குச் சட்டமன்றத்திலே ஒரு இடம் கூட இல்லை. ஜனநாயக ரீதியிலே சிண்டிகேட்டுக்கட்சி அழிக்கப்பட்டு அதன் விலாசமே இல்லையென்கிற அளவுக்கு மறைந்து போயிருக்கிறது. ஆகவே ஜனநாயக ரீதியில்



வேண்டுமானால் மற்றக் கட்சிகள் எங்களை அழித்துவிட முனையட்டும்.

விளைவு என்ன?

இவர்களுக்கு 184 இடமா? 18 இடம் கூட இனி இவர்களுக்கு இல்லை என்று மக்கள் ஆதரவோடு கூறுங்கள். அது வீரர்களுடைய செயல்; அரசியல் விவேகிகளின் நடவடிக்கை: அதை விட்டுவிட்டு இரண்டு பேர்களை அழித்து விடுவதால் எல்லாம் அழிந்து விடும் என்று கருதாதீர்கள்!

எங்களில் இருவரை அழித்து விடுவதால் உங்கள் ஆத்திரம் வேண்டுமானால் தீர்ந்து விடலாம்; ஆனால் அதன் விளைவு என்ன?

எந்தக் கட்சிக்காக இதைச் செய்கிறீர்களோ, அந்தக் கட்சி இதனால் ஆயிரம் அடிக்குக் கீழே போய்க் கொண்டிருக்குமே தவிர மேலே எழுந்து விடாது.

### வளர்ச்சி

திராவிடமுன்னேற்றக் கழகம் என்பது ஒருசில பேர்களை மட்டும் நம்பியிருக்கின்ற கட்சி அல்ல; அறிஞர் அண்ணா அவர்கள் இந்தக் கழகத்தை துவக்கி வைத்தார். அவரே போன பிறகும் கழகம் மேலும் வளர்ந்திருக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்கள் போன பிறகும் கழகம் வளர்வதற்குரியசக்தி படைத்திருக்கிறது என்றால் இந்தக் கருணாநிதி போன பிறகு கழகம் வளராதா?

நான்கைந்து பேருடைய அறிவிலே, ஆற்றலிலே, செயல்களிலே தான் கழகம் இருக்கிறது என்று கருதாதீர்கள்!

### உயிருள்ள இயக்கம்

திராவிட முன்னேற்றக்கழகம் இந்த நாட்டினுடைய இந்த நாட்டின் மொழியினுடைய இந்த நாட்டு மக்களினுடையே உரிமைகளைக் கோருகின்ற உயிருள்ள இயக்கம். அத்தகைய இயக்கத்தை என்னைச் சாய்ப்பதால் சாய்த்து விடலாம் என்று கருதாதீர்கள்.

நான் சிசுவாக இருந்த பொழுதே எங்கள் வீட்டில் கள்வர் புகுந்து தொட்டில்

(11ம் பக்கம் பார்க்க)

## அமரர் நாகாவுக்கு தமிழகம் அஞ்சலி!

அமரர் டாக்டர் நாகநாதனுக்கு தமிழகத்திலும் அஞ்சலி செலுத்தப்பட்டது. சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் டாக்டர் நாகநாதனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அவரது தமிழ் தொண்டை பாராட்டியும் உரைகள் நிகழ்த்தப்பட்டன.

உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. ஜனார்த்தனம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், நமது சாவகச்சேரி உறுப்பினர் வி. என். நவரத்தினம், இலம்புச்செல்வர் ம. பொ. சி. அமைச்சர் சத்தியவாணி முத்து தி. மு. கழகத்தைச் சேர்ந்த சி. டி. தண்டபாணி எம். பி. உட்படப் பலர் உரையாற்றினர்.

# 'மொழி எங்கள் விழி' இதுவே நாகாவின் வழி

இமயமலை சரிந்து விட்டது!

தந்தை செல்வாவின் வலக்கரம் ஒடிந்து விட்டது!

ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களுக்காக அவர்களின் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, பிரதேசம் முதலியன பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்என்பதற்காக—எமக்கும் இந்த நாடு சொந்தம், நாங்கள் இந்தநாட்டின் இரண்டாந்தரப் பிரசைகள் அல்ல, சிங்களமும் சமமாகத் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்பதற்காக, உண்மை விசுவாசத்துடன், உள்ளத்தில் எவ்விதமான கள்ளமும் இல்லாமல் உழைத்த தியாகமாமலை—இரும்பு மனிதர் இன்று எம்மிடம் இல்லை!

இயற்கையாகவே நசுக்கப்படும் மக்களுக்காகக் குரல் கொடுக்கும் எமது டாக்டர், இந்தியாவிலும், இங்கிலாந்திலும் கல்வி கற்கும்போதே நசுக்கப்படும் மக்களுக்காக, எதிர்ச்சக்திகளுடன் போர் தொடுத்திருக்கின்றார்!

ஈழம் திரும்பிய எமது கலாநிதி, தமிழ் பேசும் மக்களின் நிலையைக் கண்டு கொதிப்படைந்தார்; வேதனையுற்றார்! அவர்களின் தன்மானத்தைக் காப்பதற்காக அன்றே புறப்பட்டார்!

ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அவர் தோன்றியதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும்! எல்லாம்வல்ல சக்திக்கு நன்றி கூறக் கடமைப்பாடுடையோம்,

அஞ்சா நெஞ்சமும்-உறுதியான உள்ளமும்—எதையும், தன்மானத்தோடு, தலைநிமிர்ந்து நின்று, யாருக்கும் தலைவணங்காது செய்ய வேண்டும் என்று கருதிய எமது 'டாக்டர்'' தந்தை செல்வாவின் தலைமையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வந்தார்.

ஈழத் தமிழர்களின் எவ்விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு, தன்மானத்தோடு வாழ வழி சமைப்பதற்கு, தந்தை செல்வா தலைமையில் உள்ள, மூவர்ணக் கொடியைத் தன்னகத்தே கொண்ட, இலங்கைத் தமிழரசுக்கட்சியினாற் தான் முடியும் என்று கருதிய எமது ஈழத்துப் பட்டேல், தனது சொத்து, சுகம் எல்லாவற்றையும், தமிழர்கள் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் மூவர்ணக் கொடியைப் பதிப்பதற்காக அர்ப்பணித்தார்!

செனற்சபையிலும், பாராளுமன்றத்திலும் எமது அடிப்படை உரிமைகளைக்

**ந. சந்திரமோகன்**

காப்பதற்காக—நாம் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்று மானத்தோடு வாழ்வதற்காக, ஆட்சியாளர்களுடன் சமர்புரிந்தார்!

எமது உரிமைப் போராட்டங்களிலெல்லாம், முன்நின்று, அஞ்சா நெஞ்சனாக—உள்ளத்தில்உறுதிபொங்க, இரும்பு மனிதன் வகித்த பங்கை நினைக்கும்போது-திரும்பிப் பார்க்கும்போது எமதுள்ளம் எல்லாம் வேதனையால் வெதும்பி வெடிக்கின்றன!

1956-ம்ஆண்டு காலிமுகத்திடலில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் பெரும் பங்கு கொண்டு, எமது நிலையை உலகமறியச் செய்த எமது 'டாக்டர்', காடையர்களால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்டார்!

தொடர்ந்து நடைபெற்ற ஸ்ரீ எதிர்ப்பு,சட்ட மறுப்புப் போன்ற போராட்டங்களிளெல்லாம் ஈடுபட்டு, அடி, உதைபட்ட தியாகச் செம்மல் சிறைக்குஞ் சென்றார்!

1961-ம்ஆண்டு இலங்கைச் சரித்திரம் என்றுமே கண்டிராத முறையில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்க நிர்வாகமே ஸ்தம்பிதமடையச் செய்த பெரும் போராட்டத்தையே, எஃகு உள்ளத்துடன் பெரும் பங்கு கொண்டு நடாத்திய எமது கலாநிதி, பொலிசாரின் குண்டாந்தடிக்கு இலக்காகி, அக்குண்டாந்தடி உடையுமட்டும் அடிபட்டார்—சித்திரவதைப்படுத்தப்பட்டார்.

எமது உரிமைப் போராட்டங்களில் அமரர் நாகநாதன் வகித்த பங்கு வார்த்தைகளினால் வடிக்க முடியாதது!

தமிழரசுக்கட்சி காலத்துக்குக் காலம் ஆட்சியாளர்களுடன், தமிழ்பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்காக நடாத்திய பேச்சுவார்த்தைகளிலெல்லாம் தந்தை செல்வாவுக்கு உறுதுணையாகவிருந்த எமது 'டாக்டர்' இன்று எம்மிடம் இல்லையே!

செல்வமும், மிகுந்த செல்வாக்கும் நிறைந்த குடும்பத்தில் பிறந்த எமது தியாகச் செம்மல், தனது தொழிலை அமைதியாகப் பார்த்துக் கொண்டே சீருடனும் சிறப்புடனும் நல்வாழ்வு வாழ்ந்திருக்கலாம்!

கொழும்பில் சொகுசான வாழ்வு வாழக்கூடிய அவரது சூழலையும், நிறைந்த வருமானம் தரக்கூடிய தொழிலையும் உதறி எறிந்துவிட்டு, கரடு முரடான—சேறும் சகதியும் நிறைந்த பாதைகளிலெல்லாம் சென்று எமது உரிமைக்காகக் குரல் கொடுத்தாரே அந்த உத்தமர்!

அப்பேர்ப்பட்ட உத்தமனை நாம் பறி கொடுத்துத் தவிக்கின்றோம்!

சேர, சோழ, பாண்டிய மரபிலே வந்ததமிழன், தலைநிமிர்ந்து, தன்மானத்துடன் இந்த நாட்டில் வாழ வேண்டும் என்பதற்காக அயராது உழைத்தார்!

அவர் குண்டாந்தடி முறியுமட்டும் அடிபட்டாரே! யாருக்காக?

(11ம் பக்கம் பார்க்க)

## மறைந்தே போவீர்!

(தாமரைத்திவான்)

'நாகா' வின் மறைவன்று படமும் சேர்ந்து
நாளேடு 'கேசரி'யில் வரக்கண்டேங்கி
ஏகாந்தமாய்ப் பலதும் எண்ண நெஞ்சம்
இருவிழியும் நீர் வடிக்க இருக்கும் போதில்
பாகாகப் பேசுமொரு பாவி வந்தப்
படம்—செய்தி பார்த்தவுடன் என்னைப்பார்த்து
ஆகாகா, இவனுக்கா அழுகின்றீர் நீர்?
ஆளை இனும் சரியாக அறியீர் போலும்!

பொல்லாத புளுகன் இவன்—போலி நாதன்!
பொதுமேடை யாழ்நகரில் வைத்து 'நீங்கள்
எல்லோரும் சிங்களத்தைப் படித்திடாமல்
இருந்திட்டால் வெற்றி' எனச் சொல்லி அன்று
கல்லாமல் மற்றோரை இருக்க வைத்துக்
கற்கவைத்தான் தன்மகனை—மகளை! வீட்டில்
செல்லாது இவன் 'டுப்பு'! ஊர்க்கு மட்டும்
செப்பிடுவான் உபதேசம்! இதுவா நீதி?

இந்நிலையில் வந்தானே இரண்டாம் பாவி
எடுத்திதழைப் பார்த்தவுடன் என்னைப்பார்த்து
'அந்நாளில் அறப்போரில் அடித்த பொல்லை
அவன் மண்டை முறித்துளது! அடையாளத்தை
இந்நாளும் கண்டிடலாம்' என்பார், பொய் பொய்!
எழுந்தோடி மதில் பாய்ந்து அளையில் வீழ்ந்த
அந்நாளை யான் அறிவேன்! அதனாலன்றோ
அக்காயம் அவனுக்கு? அறியீரோ நீர்?

என்றானே, எனது துயர் எங்கோ போக
இரு விழியும் கனல் பறக்க எழுந்து நின்று
நன்றுரைத்தீர் நாவடக்கமின்றி நீவிர்!
நான் விடுவேன், தப்பிடலாம்? நாடறிந்தால் ...
கொன்றுமது குடலெடுத்து மாலையிட்டுக்
கூத்தாடிக் களித்திடுவார்! வேண்டாம் — ஐயோ
சென்றிடுவீர் இவ்வேளை என்னைவிட்டே
தெருவில் வாய் திறவாதீர்! என்றேன்—சென்றார்!

அட, கெடுவார் மனிதர்களா—விலங்கா நீங்கள்?
ஆள் உருவில் நடமாடும் அழுகல் முண்டம்!
நடமாடும் தெய்வமென வாழ் நல்லூரான்
நாகமடா உங்கட்கு! நமக்கு நாதன்!
திடமனமும் சிந்தனையும் செயலுங் கொண்டு
செந்தமிழ்க்கு உயிர் தந்து போகும் போதும்
மட மனித பிண்டங்காள்! மறந்தீர் நன்றி!
மற 'நாகன்' புகழ் ஒளிமுன் மறைந்தே போவீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழா, உன்னைத்தான்!

செப்டம்பர்-11

செத்துக் கொண்டிருக்கும் தமிழினத்துக்கு உயிர்ச் சத்தூட்டும் கவிதைகளை வாரி வழங்கி விடுதலை வெறி யூட்டிய தமிழ்ப்பெருங்கவிஞன் பாரதியின் நினைவுதினம்!

ஜாதி வெறியைச்சாடி—சமுதாய ஊழல்களை கடுமையாகத்தாக்கி—இன உணர்ச்சியையும் சுதந்திர ஆவேசத்தையும் ஊட்டி—மூடநம்பிக்கைகளுக்கு வேட்டு வைத்து—சமதர்ம, சுதந்திரப் பூங்காவாக, தமிழகத்தை படைத்திடத் துடித்தவன்—பாரதி!

பாரதியை நினைக்கும் போது—அவனது ஒளியுமிழும் கண்களை மனக்கண் முன் கொண்டு வரும்போது—நம் உள்ளமெங்கும் விடுதலைத் தீ பற்றிப்பிடிக்கிறது; அவனது கவிதைகள் புதுவேகத்தையும் சக்தியையும் நம் உடலெங்கும் பாய்ச்சுகின்றன; தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்று தோள்தட்டி ஆடுகின்றோம்!

பாரதியின் பாடலுக்கு அன்று வெள்ளையரசாங்கம் நடுநடுங்கியது; இன்று சிங்கள அரசாங்கம் நடுநடுங்குகிறது. அதனால்தான் 'சிங்களத்தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' என்ற அவனது பாடலுக்கு தடைபோடும் முட்டாள்தனத்தில் இறங்கியது;

ஆம், பாரதியின் பாடல்கள் விடுதலைக்குப்போராடும் ஈழத் தமிழக மக்களுக்கு ஒரு கைவாள்; அயர்வை நீக்கிடும் அரு மருந்து; சுதந்திர வெறி யூட்டும் சுவையான மது!


பாரதிக்கு விழா எடுப்பதற்கு, நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமுமின்றி—அடிமைத்தனத்தை ஏற்று அதிகார வர்க்கத்துக்கு வால் பிடித்து வயிறு கழுவும் மானம் கெட்ட ஈனப்பிறவிகளுக்கு கொஞ்சமும் உரிமை இல்லை!

இத்தகையவர்கள் மீது தான் "மோதி மிதித்து விடும்படியும் அவர் முகத்தில் உமிழ்ந்து விடும்படியும்" மீசை துடித்திட பாரதி முழங்கினான் அன்று!

ஆம், துரோகிகளை—கோழைகளை — அடிமைத்தனத்துக்கு சாமரை வீசுபவர்களை—விடுதலைக்குப் போராடவேண்டும் என்று தோள்தட்டிக் கிளம்பாது நசிந்து குழைந்து ஆட்சியிலிருப்பவர்களின் அடிதொழுது வாழ நினைக்கும் சோற்றுத்துருத்திகளை தமிழ் சமூதாயத்தின் புல்லுருவிகள்—ஒழித்துக்கட்டப்படவேண்டியவர்கள் என்று கருதியவன் பாரதி!

"ஆப்பிரிக்கத்துக் காப்பிரி
நாட்டிலும்
தென் முனையடுத்த தீவுகள்
பலவினும்
பூமிப்பந்தின் கீழ்ப்புறத்
துள்ள
பற்பல தீவினும் பரவி யிவ்
வெளிய
தமிழச் சாதி தடி யுதை
யுண்டும்

இன்னும் பாரதி கண்ட அதே அவல நிலை தானே தொடருகிறது! இந்த நாட்டின் வளத்துக்காக தலைமுறை தலைமுறையாக உடல் தேய உழைத்த மலை நாட்டுத் தமிழர்கள் இன்று கண்ணீரும் கம்பலையுமாக கழுத்தை பிடித்து வெளியே தள்ளப்படும் நன்றி கெட்ட செயலையன்றோ நாம் இங்கு காணுகின்றோம்! மனைவி ஈழத்தில் கண்ணீர் விடமழலைகள் பரிதவிக்க—கணவன் மட்டும் நாடு கடத்தப்படும் காட்டுமிராண்டித்தனமன்றோ இன்றும் காண்கின்றோம்! கத்தும் கடல் அடக்கி வாழ்ந்த நம்மவர்கள் கள்ளத்தோணிகள் என்று இன்று கேலி பேசப் படுவதை பாரதி கேட்டிருந்தால் புயல் போலல்லவோ பொங்கியெழுந்திருப்பான்? தமிழனின் உழைப்பை உறிஞ்சி விட்டு அவனை வெளியே உதைத்துத் தள்ளும் கொடுமையை எதிர்த்து எத்தனை புரட்சிக்கவிதைகள் பாரதி வாயிலிருந்து இன்று வெடித்திருக்கும்?



சொந்த அரசும் புவிச்
சுகங்களும் மாண்புகளும்
அந்தகர்க்குண்டாகுமோ
—கிளியே
அலிகளுக்கின்ப
முண்டோ!

மாண்பினை இழப்பாரோ
கண்ணிரண்டும் விற்று
சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ...?

ஆம், கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்க மாட்டோம்: கண்ணினுமினிய தமிழ் விடுதலையை அடைந்தே தீருவோம் என்று பாரதி நினைவு நாளில் தமிழ் இளைஞர்கள் பிரதிக்ஞை செய்துகொள்ளவேண்டும்.

சாதீயத்தை—தீண்டாமையை—வேரோடு வெட்டி வீழ்த்தி—ஒன்றுபட்ட, ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமற்ற— விடுதலைத் தமிழகத்தை நம் வாழ் நாளிலேயே காண உறுதிடுபடிதிடவேண்டும்;

நாட்டிலெங்கும் சுதந்திர
வாஞ்சையை
நாட்டினாய் கனல்
மூட்டினாய்
வாட்டியுன்னை மடக்கி
சிறைக்குள்ளே
மாட்டுவேன்—வலி காட்டு
வேன்

## விடுதலை உணர்ச்சி பீறிட்டெழுந்திட பாரதிபாடலை நாடெலாம் முழங்கு!

காலுதை யுண்டும்
கயிற்றடி யுண்டும்
வருந்திடும் செய்தியும்
மாய்ந்திடும் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர்
பிரித்திடல் பொறுது
செத்திடும் செய்தியும்
பசியாற்சாதலும்
பிணிகளாற் சாதலும்
பெருந்தொலையுள்ளதம்
நாட்டினைப் பிரிந்த
நலிவினால் சாதலும்..."

கண்டு குமுறியெழுந்து,
"விதியே விதியே தமிழ்ச்
சாதியை
என் செயக் கருதி
யிருக்கின்றாயடா?"

என்று கொதித்துக் கேட்டவன் பாரதி.

'மெல்லத்தமிழினிச்சாகும்
—அந்த மேற்கு
மொழிகள் புவி மிசை
யோங்கும்'

என்று யாரோ கூறியது கேட்டு குமுறிய பாரதி, இன்று ஈழத்தில் தமிழ் முற்றாக ஒழிக்கப்பட்டு சிங்களமே நீதி மன்ற மொழியாக—ஆட்சிமொழியாக — தமிழ் மக்களின் தொண்டைக்குள் திணிக்கப்பட்டு வருவதைக் கண்டிருந்தால் தோள்தட்டிக் கிளம்பியிருக்கமாட்டானா? ஆர்ப்பரித்து ஆயிரம் போர்ப்பரணி பாடி யிருப்பானே!

மொழியுரிமை அரசுரிமை இரண்டுமிழந்து ஈழத்தில் இன்று தமிழன் வாழ்ந்திடும் இழி நிலையைப்பற்றி அன்றே தட்டிக்கேட்டான் பாரதி! தமிழனுக்கு சூடு சுரணை இருக்கிறதா என்று நாடி பிடித்துப்பார்க்கிறான் அவன்!

'பாமரராய்,
விலங்குகளாய்,
உலகனைத்தும் இகழ்ச்சி
சொலப்
பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக்
கொண்டிங்கு வாழ்ந்
திடுதல்
நன்றோ'
ஊமையராய்க் குருடர்
களாய்
செவிடர்களாய் வாழ்ந்
திடுதல்
நன்றோ?

என்று எல்லாம் கேட்டு இரத்தக் கண்ணீர் வடித்தானே பாரதி—அதே நிலையிலேயே நாம் இன்னமும் தொடர்ந்து வாழப்போகின்றோமா? ஈழத்தமிழன் இதற்கு பதில் சொல்லியே ஆகவேண்டும்!

தமிழினத்தின் பகைவர்களுக்கு கால் பிடித்து, தாள் பணிந்து தமிழ் மானத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் ஈனத்தனத்தை முற்றாக வெறுத்தவன் பாரதி. ஒத்துழைப்பு என்ற போர்வையில், தமிழினத்தின் மானத்தை விற்றுவரும் [illegible]சைத் துரோகிகளுக்கு அன்றே சாட்டையடி கொடுத்தவன் பாரதி!

கண்கள் இரண்டிருந்தும்
காணும் திறமையற்ற
பெண்களின் கூட்ட மடி
கிளியே
பேசிப்பயனென்னடீ!

ஊக்கமும் உள் வலியும்
உண்மையிற்பற்றுமில்லா
மாக்களுக்கோர்
கணமும்—கிளியே
வாழத்தகுதி யுண்டோ?

மானம் சிறிதென்
றெண்ணி
வாழ்வு பெரிதென்
றண்ணும்
ஈனர்க் குலகந்தனில்—
கிளியே
இருக்க நிலைமை யுண்டோ?

ஆம்—இன்றைய ஆனந்த சங்கரி, அருளம்பலம், தியாகராசா குமார சூரியர், மாட்டின், வி. பொன்னம்பலம், துரையப்பா, ராஜன், போன்றோருக்கு அன்றே

கோழைப்பட்ட
ஜனங்களுக்கு உண்மைகள்
கூறினாய்—சட்டம் மீறினாய்—
ஏழைப் பட்டிங்கு
இறத்தல் இழிவென்றே
ஏசினாய்—வீரம்—பேசினாய்!
சுட்டு வீழ்த்தியே புத்தி
வருத்திடச்
சொல்லுவேன்—குத்திக்
கொல்லுவேன்
தட்டிப்பேசுவோருண்டோ?
சிறைக்குள்ளே
தள்ளுவேன்—பழி—
கொள்ளுவேன்"

—என்று கூறிக்கொண்டு ஈழத்தமிழகத்தின் விடுதலைக்குக் குரல் கொடுக்கும் நம் மீது அதிகார வர்க்கம் அடக்குமுறையை அள்ளி வீசினாலும் வீசலாம்! அப்படிப் பாயும் அடக்கு முறை சக்திகளுக்கும் பாரதி மொழியிலேயே—அச்சமின்றி இப்படிப்பதில் கொடுப்போம்.!

**கோவை-மகேசன்**

பாரதி கொடுத்த பலமான சாட்டையடி இது!

அற்ப சலுகைகளுக்காக இன விடுதலைக்கோரிக்கையை கைவிட்டு அடிமைத்தனத்தை ஒப்புக்கொண்டு சரணாகதியடைவோம் என்று கூறிடும்கோழைத்தமிழர்களை பார்த்து ஆத்திரத்துடன் இப்படிக்கேட்கிறார் பாரதி:-

வீரசுதந்திரம் வேண்டி
நின்றார் பின்னர்
வேறொன்று கொள்ளுவரோ
—என்றும்
ஆரமுதுண்ணுதற் காசை
கொண்டார்—கள்ளில்
அறிவைச் செலுத்துவரோ?

பிறந்தவர் யாவரும்
இறப்பதுறுதியெனும்
பெற்றியை அறிந்தாரேல்—
மானம்
துறந்தறம் மறந்தும் பின்
உயிர்கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ?

மண்ணிலின்பங்களை
விரும்பி சுதந்திரத்தின்

சொந்த நாட்டிற் பரற்
கடிமை செய்தே
துஞ்சிடோம்—இனி
அஞ்சிடோம்;
எந்த நாட்டிலும் இந்த
அநீதிகள்
ஏற்குமோ தெய்வம்
பார்க்குமோ?

சதையைத் துண்டு
துண்டாக்கினும்
உன் எண்ணம்
சாயுமோ ஜீவன் ஓயுமோ—
அழுது கொண்டிருப்பமோ
—தாங்கள்
ஆண்பிள்ளைகள் அலலமோ
உயிர் வெல்லமோ?

ஆம் நமக்கு உயிர் வெல்லமல்ல—தமிழ் உரிமைதான் முக்கியம் என்று ஈழத்தமிழகத்து மக்கள் தங்கள் வைர நெஞ்சங்களில் பதித்துக் கொள்ளவேண்டும்!

"என்று தணியுமிந்த
சுதந்திரதாகம்
என்றுமடியுமெங்கள்
அடிமையின் மோகம்

(11ம் பக்கம் பார்க்க)

## வருவாயோ கவிமன்னா?

(காந்தன் — கந்தர்மடம்)

"பாட்டுக் கொரு புலவன் நீயே யென்று
பாரதியே உன் புகழைப் பலரும் சொன்னார்;
ஏட்டில் உன் கவிதைகளை எழுதிவைத்து
ஏமாற்றும் அரசியலார் கூச்சல் இட்டார்;
நாட்டுக்கு உழைக்கின்றோம் என்று கூறி
நாவாலே சேவைசெய்யும் மாந்தர் உன்றன்
பாட்டுகளை மேடைகளில் முழக்குகின்றார்
பாரப்பா கவிக்குயிலே இந்த நாட்டை!"

"என்று தணியுமென்று விடுதலைக் காய்
ஏங்கி நின்றாய் ஓர் காலம் பின்னால் அஃது
வென்று விட்டோம் என்றிருந்த வேளை தன்னில்
ஏமாந்தோம்! உண்மை அது எமக்கு இல்லை;
அன்று பெற்ற சுதந்திரத்தால் மீட்சியில்லை
அடுத்தடுத்துச் சோதனைகள் சூழ்ந்து எம்மைத்
தின்று தொலைக்குதப்பா நீயே மீண்டும்
இம்மண்ணில் பிறந்திடுக! துயரம் போக்க!"

"பதவிக்குப் பல்லிழிக்கும் மாந்தர் தங்கள்
பல்லுடைக்கப் பாபாடும் புலவன் வேண்டும்
சுதந்திரத்தை எதுவென்று விளக்குதற்குச்
சுயஉணர்வுப் பிரக்ஞையுடைக் கவிஞன் வேண்டும்
உதவுகிறோம் எனச் சொல்லிக் குழிபறிக்கும்
உன்மத்தர் தமைச் சாடக் கவிஞன் வேண்டும்
இதமாக எம்மினத்தோர் நெஞ்சந் தன்னில்
இவையுணர்த்த நீயேதான் வரவும் வேண்டும்."

"சொந்த நாட்டிலே பிறர்க்கு அடிமை செய்து
உயிரற்ற நடைப் பிணமாய் வாழ்வோர் தம்மை
சிந்திக்க வைத்த துன்றன் கவிதையன்றோ
சீரிளமைத் தமிழிலன்றோ அவையும் உண்டு
வந்துற்ற இடர்நீக்க உன்போலிங்கு
வலுவான கவிவார்த்தை சொல்லுதற்கு
வந்திக்க வேண்டு மெங்கள் தமிழ மண்ணில்
வருவாயோ கவிமன்னா மீண்டும் இங்கு?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி எனும் மணிக்கவி!

செப்டம்பர்—11 மகாகவி சுப்பிரமணிய பாரதியின் நினைவு தினமாகும். அப்புரட்சிக் கவியின் நினைவாக இக்கட்டுரை இங்கு இடம்பெறுகிறது. பாரதி கண்ட புதுமைப் பெண்போல வாழ விரும்பும் செல்வி சற்குணதேவி நடராசா பாரதியைப் பற்றி இக்கட்டுரையில் சுவைபட ஆராய்கிறார்.

## செல்வி சற்குணதேவி நடராசா

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர் போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை"-என வெறும் புகழ்ச்சியில்லாமல் உண்மை கூறிப் பாடிய பாரதி-யார்? எனும் கேள்வி இலக்கிய உலகில் விஸ்வரூபம் எடுத்துள்ளதைக் காணலாம்.

பாரதி, தேசிய வாதியா? புரட்சிவாதியா—வகுப்புவாதியா—நாஸ்திகரா-ஆஸ்திகரா—அவர்கவிதை எந்தக் கருவை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது என்பது விமர்சகருக்குள்ள பெரும் பெருந்தலையிடிகளில் ஒன்று;

இந்தக் கேள்விகளுக்கு விடை காணுமுன், "கவி என்பான் யார்? என்று பார்ப்போம்.

தான் வாழும் காலத்தை—சூழலைமட்டும் அப்படியே, படம் பிடித்துக் காட்டும் கருவியாக இல்லாமல்—மாறுபட்ட சூழலில் நின்று—காலத்தை முன்னும், பின்னும் நோக்கி—அதனூடே தன் அனுபவத்தை உள்ளீடாக்கி நிலையான கவிதை யாப்பவனே—காலவெள்ளத்தில் அடிபடாமல். காலத்தை வென்று நிற்பவனுவான்! பாரதி அப்படிவாழ்ந்தாரா?

பார்ப்போம்! பாரதி வாழ்ந்த காலத்தில் பாரத நாடு-அந்நியராட்சியில் சிக்கி—தாழ்வுற்று—வறுமை விஞ்சி-தவறிக் கெட்டு—பாழ்பட்டு-அடிமைத் தளையை அறுத்து சுதந்திர கீதம் பாடத் துடித்துக் கொண்டிருந்தது. அக்காலத்தில்—

இன, மொழி, கலை, கலாசாரப் பெருமைகளை முற்றாக மறந்து—ஆங்கில மோகத்திலும்—ஆங்கில நாகரீகம்—பண்பு என்பவற்றுளும் சிக்கிக் கிடந்த மக்களுக்கு, இன உணர்ச்சி—மொழிப் பற்று—கலாச்சாரப் பண்பு என்பனவற்றை ஊட்ட வேண்டிய தேவையிருந்தது. அந்தப் பெரும் பணியில் பங்கெடுத்து, கடமை செய்யும் முன்னோடிகளில்—தலைவர்களில் ஒருவராக பாரதியார் தம் கருத்துக்களால்—கவிதைகளால் மற்றையோருடன் மோதிப் போர் புரிந்தார்.

### மானத்தை இழந்து வாழலாமா?

பழம் பெருமைகளை மறந்து நின்ற மக்களுக்கு—அவர்கள் இழந்துவிட்ட பெருமைகளை—அவர்களது முன்னோரது பெருமைகளை—அந்த முன்னோர் வாழ்ந்த காலத்தை எடுத்துச் சுட்டிக் காட்டினார்.

"பாருக்குள்ளே நல்ல
நாடு—எங்கள்
பாரத நாடு
ஞானத்திலே பரமோனத்
திலே—உயர்
மானத்திலே அன்ன
தானத்திலே
கானத்திலே அமுதாக
நிறைந்த
கவிதையிலே உயர்நாடு!

தீரத்திலே படைவீரத்
திலே—நெஞ்சில்
ஈரத்திலே உபகாரத்திலே
சாரத்திலே மிகு சாத்திரம்
கண்டு
தருவதிலே உயர் நாடு"
எங்கள் பாரத நாடு!"

என்று, தம் சொந்தப் பண்பை இழந்துவிட்ட மக்களைப் பார்த்து—"நம் முன்னோர் (உயர்) மானத்திலே சிறந்தவர்கள்! அப்படியான மானிகளின் பரம்பரை நீவிர் ஏன் மானமிழந்து ஆங்கிலக் கல்வி கற்று—அந்நியராட்சியில் அடிமைகளாய் பதவி வகிக்க வேண்டுமென்கிறீர்?

### பொதுவுடமைப் பாரதி

அப்படி வினவும் வேளையிலேயே, அன்று நாட்டில் நிலவிய பஞ்சத்தையும் காணத் தவறவில்லை—இவ்வேளையில் பாரதியின் கவிதை பரந்து பொதுவுடமையைத் தொடுகிறது. "தனி மனிதனுக்குணவில்லையெனில் ஜகத்தினையே அழித்துவிடத் துணிந்த" "புரட்சிப்" பாரதியார்—மக்கள் மனத்திலே பொதுவுடமைவித்தை மெல்லத் தூவிவிடுகிறார். எப்படி? "நம் முன்னையோர் கருணையுடையோர்—உபகாரிகள்—அன்னதானஞ் செய்வதில் சிறப்புற்று விளங்கினர்கள்"—என்று புரட்சிக்கீதம் முழங்கிய தன் கவிதையாலேயே—பொதுவுடமையையும்—ஒரு கூட்டுறவுப்பரந்த மனத்தினையும் நாசூக்காகக் கூறுகிறார்;

### புரட்சிக்கு வித்து

மானமாய் வாழ......ஒற்றுமையாக உயர்வாக வாழ வேண்டுமென்ற பாரதியார், அடிமைகளாக அலைந்துபட்டு—ஊர்ந்து செல்லும் புழுக்களாக—நடந்து செல்லும் நடைப் பிணங்களாகத் திரிந்த மக்கள் மனதில் சுதந்திர உணர்ச்சியை ஊட்ட "தீரத்திலே—படை வீரத்திலே—உடல் வன்மையிலே......புயவீக்கத்திலே, பாருக்குள்ளே சிறந்த நம்நாடு தாழ்வுற்று அடிமைப்பட்டு நிற்கிறதே என்று பழம் பெருமை கூறி—புதுப் புரட்சிக்கு வித்திடுகிறார்;

மேலும் ஆங்கில மோகத்தில் சிக்கி வசமிழந்து நிற்கும் மக்களைப் பார்த்து, "மெல்லத் தமிழினிச் சாகும் அந்த மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்" என்று தமிழை மறந்து நிற்கும் இன்றைய சமூகத்திற்குக் கூறியதுடன்—பண்டைத் தமிழரின் ஆற்றலை, "கானத்திலே அமுதாக நிறைந்த கவிதையிலே—சாரத்திலே—மிகு சாத்திரங் கண்டு தருவதிலே" சிறந்து உயர்ந்துநின்றனர் என்று விளக்கினர். இப்படியே, தன் கவிக்கண் கொண்டு பழம் பெருமைகளை எடுத்தாண்ட கவிஞர் தான் நிற்கும் சூழலுக்கு எத்தனையோ பின்னேக்கி புதுக் கனவுகளையும் கற்பனைகளையும் காணவும் தவறவில்லை.

### கவிஞனின் தனிச் சொத்து

"காசி நகர்ப் புலவர் பேசும் உரை தான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்—வானையளப்போம்—கடல் மீனையளப்போம்—சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்" என்று எதிர்கால வாழ்வை பின் நோக்கி அதனூடேதன் அனுபவத்தை உள்ளீடாக்கி கால வெள்ளத்தால் அழியாத கருத்தைத் தம் கவிதையில் காட்டி நிற்கிறார் பாரதியார்.

முன்னும் பின்னும் நோக்கும பாரதி தான் வாழும் சூழலை எடுத்துக் காட்ட—அந்நியர் ஆட்சியில் நசுங்கி நிற்கும்நாம் "ஞாலத்தையே நடுங்கவைக்கும் கப்பல்களைச் செய்வோம்—என்றும் சந்திதெருப் பெருக்கும் சாத்திரங் கற்போம்" என்றும் ஒரு பரந்த பாரதத்திற்கும் வித்திடுகிறார்:

தம் கவிதையின் ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு மணியான கருத்துக்களைச் சொல்லி வந்த பாரதியார் கடைசியாக, "உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்" என்றும் கூறி வைக்கிறார். இப்படியே தான் வாழும் மாறுபட்ட சூழலில் நின்று முன்னும் பின்னும் நோக்கிய பாரதியாரும் கம்பன்—வள்ளுவர்—இளங்கோ—போன்ற புலவர் வரிசையிலேயே சேர்க்கக் கூடிய மகா கவியாக நிற்கிறார்.

இவ்வளவும் கூறினாலும்—பாரதியார் வாழ்ந்த அடிமைச் சூழலில் இப்படியான கனவுகளும் கற்பனைகளும் தோன்றுவது சர்வசாதாரணம் என்றும் சொல்லலாம் தானே? ஏன்? அடிமை வாழ்வு வாழ்பவன் ஒருவன் சாதாரணமாகவே காணும் கனவுகளும் இப்படி அமைவது இயல்பு தானே? அந்த வகையில் பாரதியை ஒரு வெறும் கவியென்று எப்படிச் சொல்லலாம்?

"கனவில் உதித்து கருவிற் பிறப்பது கவிதை!" கண் காணுகின்ற சம்பந்தமில்லாத ஒன்றின் பண்புடன் வேறொன்றின் பண்பை இணைக்கின்ற புலமை கவிஞனின் தனிச் சொத்தாகும். [illegible] பொழுது விடியும் இது இயற்கையான ஒன்று! ஆனால் பாரதியாரோ—

"பொழுது புலர்ந்தது யாம் செய் தவத்தால்—புன்மையிருட் கணம் போயின யாவும்—எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி" என்று பாடுகிறார். பாரதியார் காலைப் பொழுதின் கவினுறு காட்சியை அழகாக நயம்படக் கூறுகிறார் என்று பார்த்தால் நாம் ஏமாந்தோம்.

### விடுதலைக் காட்சி

பாரதி கவிஞனாக நின்று பாடும் பொழுது கூட வெறும்



கவியாக நிற்கவில்லை. அவரது நோக்கு பரந்து நிற்கிறது. அடிமைத் தளையை அறுத்தெறிய கவி பாடும் பொழுது எப்படி "கற்பனையாக"ப் பாடுகிறாரோ—அப்படியே "கற்பனையாக"ப் பாடும் பொழுது அடிமை விலங்கை அறுக்கும் கவியாக—கருவியாக அவரது கற்பனை வளர்வதைக் காணலாம். ஆம்! இரவு முடிந்து—பொழுது புலர்ந்து—சூரியன் உதிக்கும் சாதாரண காட்சியை, "யாம் செய் தவத்தால்" என்கிறாரே பாரதியார்? ஆமாம்! யாம் செய்த தவத்தினால் மக்கள் மனதில் அறிவுச் சூரியன் உதித்தான்—அந்த அறிவொளியால்—அடிமை இருளகன்று பொற்சுடராக விடுதலைச் சூரியனும் உதிக்கிறான் என்று தமது கற்பனைக் காட்சியிலே—நாட்டு சுதந்திரத்தினை மிக மென்மையான இழையினூடே காட்டுகிறார் பாரதி! சாதாரண காலைக் காட்சி அவர் நெஞ்சில் விடுதலைக் காட்சியைக்கோலமிடுகிறது.

இம்மாட்டா? அன்னரின் "காணி நிலம் வேண்டும்" என்ற பாடலை எடுப்போம்: "காணி நிலம்—துய்ய நிறத்தொரு மாளிகை—கேணி—தென்னை மரக்கீற்று—இளநீர்" என்றெல்லாம் பாரதியார் பராசக்தியிடம் 'வேண்டும்' போது சாதாரண ஒருவர் கேட்கும் கேள்விகளாக நிற்கிறது. ஆனல், அடுத்த வரியிலேயே பாரதியான் தாம் ஒரு கவியெனக் காட்ட "முத்துச் சுடரொளி போல நிலவொளி வரவேணும்" என்கிறார். இவற்றை நாம் ரசித்துச் சுவைத்துக் கொண்டே அடுத்த அடியைத் தொடும்போது திடுக்குறுகிறோம்—திகைக்கிறோம்—பின்னர் பலமாகச் சிரிக்கிறோம்!

பின்னே என்ன? "மகா கவி" என்று பட்டம் பெற்றுவிட்ட கவிஞர், "கத்தும் குயிலோசை" என்றல்லவா சொல்கிறார், "பத்து—முத்து—சித்தம்" என்று முன்னும் பின்னும் அடியெடுத்த பாரதியார் எதுகை மோனைக்காகவே, "கத்தும் குயிலோசை" என்று எடுத்தாள்வதாகவன்றோ தெரிகிறது.

### குயில் கூவுமா கத்துமா

குயில் கத்துமா? பள்ளியில் படிக்கும் பாலனைக்கேட்டாலும் "குயில் கூவும்" என்றல்லவா சொல்வான்? பாரதியார் 'கத்தும்' என்று கூறியது எத்தனை மகா தப்பு? உண்மை நிலையை—கவிதை மரபை விட்டே விலகிச் செல்வதாகவன்றோ இருக்கிறது இந்த வரி? அதுவும் பாரதி பாடல் இரவுச் சூழலையல்லவா பின்னணியில் கொண்டுள்ளது? இரவில் குயில் கூவுமா? என்ன என்று குழம்பி பின் சிந்திக்கும் போது தான் விடை கிடைக்கிறது. எப்படி? குயில் கத்துகிறது என்ற 'உண்மையைக் காணும்' போதுதான்! குயில் கத்துவது ஏன்? குயில் கூவுவது ஏன்? குயில் தன் பெடையை அழைக்கத்தான் இனிமையாகக் கூவுகிறது! அந்தக் காதற்குரலே நாம் கேட்கும் குயிலின் இனிய கூவல்—கீதம்!

ஆனல், பாரதி கண்ட குயில் பகல் முழுவதும் தன் ஜோடியை அழைக்கிறது. ஆனல் அந்தக் கர்வக் குயில் வந்து விடவில்லை. அதனல், ஏமாற்றம்—வேதனை—சோர்வு—தாபம் கொள்கிறது அந்தக் குயில்! அதோடு பகல் முழுவதும் கூவிக் கூவி அதன் குரல் கரகரத்து—ஒடிந்து—விட்டது! அப்படித் தன் குரல் மாறிய பின்னும்—பகல் முழுவதும் ஓயாது அது அழைத்தும் அந்தப் பெடை வராத பின்னும்—அந்தக் காதற்குயில் இரவுங்கூட தன் ஜோடியை அழைக்கிறது. அந்தப் போது அதன் இனிய குரல்—கூவல் நமக்குக் கத்தலாகக் கேட்கிறது! ஆமாம்! இதுதான் "கத்தும் குயிலோசைக்கு" விளக்கம்! இந்த உண்மை எம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்!

### புதுமை

சரி! இன்பச் சூழலைவேண்டியாசிக்கும் கவி, எதற்காக ஒரு துன்ப நிகழ்ச்சியையும் வேண்டவேணும்? குயிலின் கூவல்—கத்தல் துன்பமான ஒன்று என்று தெரிந்தும், பாரதியார், அதை ஏன் பராசக்தியிடம் கேட்கவேண்டும். பிறரின் துயர் இன்பமானது என்றா? அதுவும் அவர் போன்ற—ஏகாந்தத்தின் இனிமையில் நிற்கும் ஒரு கவிக்கு குயிலின் கத்தல் அவர்களின் இன்பத்தைச் சிதைந்து விடாதா?

பாரதியார், இதில் கூட புதுமை மெருகுடன் ஒளிர்கிறார். பாரதி கவிதை மரபை விட்டது உண்மைதான் எனினும்—அவர் உலக உண்மையை மறந்து விடவில்லை. உண்மைதான்! கலப்பற்ற—முழு நிறைவான இன்பம் என்பது உண்டா? இல்லையே! இன்பமும் துன்பமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக பிரிக்க முடியாமல் உள்ளவை அன்றோ?

(10ம் பக்கம் பார்க்க)

## பாரதி காட்டிய பாதையிலே....

—சோமலிங்கம்—

பாரதி காட்டிய பாதையிலே—நாம்
படையாய்ச்சென்றால் வென்றிடலாம்
சாரதியாக அவன் வருவான்—இளம்
தமிழா நீயும் படையில் நட!

சோறுபெரிதென எண்ணுதே—உன்
சுதந்திரம் பெரிதென எண்ணிடுவாய்
கூறுபட்டு நில்லாதே!—பாரதி
கூறிய பாதையில் சென்றிடுவாய்!

ஏறு நடைபோட்டுப் பாரதியும்—நம்
இதயக்கண்முன் செல்கின்றான்
மாறு பட்டு நில்லாதே!—நீ
மறவன் என்பதை மறவாதே!

சாதிகள் பேசித் தமிழா! நீ—உன்
சந்ததி காட்டிப் பிரியாதே!
வீதியில் நாயை நாய் கடிக்கும்—அந்த
வீரத்தை நம்முன் காட்டாதே!

அன்பு கொண்டு ஒன்றிடுவாய்—இந்த
அகிலத்தை இன்றே வென்றிடுவாய்
என்று சொன்ன பாரதியின்—தமிழ்
இதயம் குளிரப் படையில் நட!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீக்குள் விரலை வைத்தால்...!

## (அத்தியாயம் 13)

தன்னம்பிக்கை எவனுக்கு இல்லையோ, அவனுக்குப் பிறரிடத்திலும் நம்பிக்கை இருப்பதில்லை. தன்னில் தன் திறமையில் நம்பிக்கை இருப்பவனுக்குப் பிறரிடத்திலும் நம்பிக்கையிருக்கும். இது ஒரு நுட்பமான மனத் தத்துவம். இத்தத்துவத்தின் கோட்பாட்டைக் கடைப் பிடிப்பவன் ரகுராமன். ஆனல் பானுமதி அப்படிப் பட்டவளில்லை. அவளிடம் நம்பிக்கை அடிக்கடி நசிந்து போய் விடுகின்றது. அதற்குக் காரணம் அவள் பெண்ணுயிருப்பதுதானே?

சில வருடங்களுக்கு முன்னர், அவளுக்காக வாழ்ந்த ஒரு அண்ணன் இறந்தபோது அவள் மனதிலிருந்த நம்பிக்கைகளும் நாசமாகிவிட்டன. அன்றிலிருந்து அவள் எதையும் இலகுவில் நம்பி விடுவதில்லை. அப்படி நம்பினலும் அதில் அவளுக்கு என்னவோ சந்தேகங்கள் தோன்றிவிடும். அப்படித்தான் அப்பொழுதும் அவள் மனதில் தோன்றிய சில நம்பிக்கையீனங்கள் அவள் விழிகளில் கண்ணீரைப் பெருக வைத்து விட்டன.

ரகுராமன் அவளுக்கே உரியவனுகி விட்டான். அவனிடம் உரிமையோடு பேசுவதற்கு அவளுக்குத் துணிவு பிறந்து விட்டது. தான் விரும்பாத ஒன்றை அவன் செய்தால் அதைத் தடுக்கவோ, கேட்கவோ, புத்தி கூறவோ இனி அவள் தயங்கப் போவதில்லை. அந்த நிம்மதியுடன் அவள் தன் கடமைகளில் ஈடுபட்டாள்.

அன்னபூரணி அம்மாளின் மனதில் அளவுக்கு மீறிய ஆனந்தம் பொங்கி வழிந்தது. பணம், பொருள் பற்றி அவள் கவலைப் படவில்லை. அழகும், அறிவும், அதற்கேற்ற குணமும் கொண்ட மருமகள் கிடைக்கப் போகிருள் என்ற மன நிறைவில் அடுப்பில் பொங்கி வழியும் பாலைக் கூடக் கவனியாது இருந்து விட்டாள்.

'அம்மா! பால் பொங்கி வழியுது. நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?' என்றுள் அங்கே வந்த பாரதி.

'பாரதி! நான் என்னடி நினைவிலிருக்கிறன். எல்லாம் அந்தப் பெண் பானுவைப் பற்றித் தான். ஏன் பாரதி, அவளை இனிமேல் இங்கேயே வந்து சாப்பிடச் சொன்னுல் என்ன?' என்றுள்.

'அம்மா, அதைத்தானம்மா நானும் உங்களிடம் சொல்லலாம் என்றிருந்தேன். அண்ணு சம்மதிப்பானே?'

'அவனை என்னடி கேக்கிறது. நான் போய் அவளை இப்பவே கூட்டி வருகின்றேன்' என்று கூறிவிட்டு எழுந்து சென்றுள்.

அன்னபூரணி அம்மாள் பானுமதியை அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்த பொழுது, தம்புராவின் சுருதியோடு பாரதியின் குரலும் சேர்ந்து ஓர் ஆரவாரத்துடன் ஒலித்துக் கொண்டிருந்தது. மைசூர் வாசுதேவாச்சாரியின் "தேவாதி தேவா ஸ்ரீவாசு தேவா" என்ற கீர்த்தனையை அவள் பாடிக் கொண்டிருந்தாள்.

'வா பானு. பூசை அறையில் பாரதி தான் பாடிக் கொண்டிருக்கிறுள்' என்று கூறி அவளைப் பூசை அறைப் பக்கமாக அழைத்துச் சென்றுள்.

பாரதி பாடிக்கொண்டிருப்பதை மெய் மறந்து ரசித்துக் கொண்டு நின்றுள் பானுமதி. பாடி முடிந்ததும், 'ஏன் பாரதி, இது என்ன ராகம்?' என்றுள்.

'சுதாத விநோதினி' என்றுள் பாரதி.

'அதுதானே கேட்டேன். வேறு ராகமாயிருந்தால் நான் கூறியிருப்பேன்.

'உனக்கும் சங்கீதத்தில் ஈடுபாடு உண்டா?' என்றுள் அன்னபூரணி.

'முன்பு படித்திருக்கிறேன். வாசிற்றிக்குப் போன பின்பு நிறுத்தி விட்டேன்' என்றுள் பானுமதி.

'பானு! இன்று வெள்ளிக் கிழமை நீயும் ஒரு பாட்டுப் பாடேன்' என்றுள் பாரதி.

'நானு?'

'ஏன் பானு! நீ படித்திருக்கிறுய். சங்கீதம் மறந்து போய் விட்டது என்று கூறவும் முடியாது. வா பானு.'

'பாரதி எனக்கு......'

'பரவாயில்லை பானு. அடிக்கடி திருப்பாவை, தேவாரம் பாடுவாயே, அதில் ஒன்றைப் பாடேன்' என்று வற்புறுத்தினுள் பாரதி.

'அதற்கென்னம்மா, உனக்குத் தெரிந்தவற்றில் ஒன்றைப் பாடேன். நானும் கேட்போம்' என்றுள் அன்னபூரணி.

பானு அரை மனத்துடன் பூசை அறையில் அமர்ந்தாள். அவளுக்கு அருகில் அன்னபூரணியும் உட்கார்ந்தாள். தம்புராவின் நாத ஒலி அந்தப் பூசை அறையில் ஒருவித அமைதியையும், அதே வேளையில் ஊதுவர்த்தியின் நறுமணம் ஒருவித புத்துணர்வையும் அவள் உள்ளத்தில் தோற்றுவித்தது. பக்தி மணம் கமழும் அந்த அறையில் தன்னை மறந்த நிலையில் பானு இருந்தபோது, பல்கலைக்கழகத்தில் படித்த நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் கண்ணன் மீது பாடிய பாடல்கள் ஒன்றன் பின் ஒன்ருக அவள் நினைவில் உதித்தன. ஒன்று, இரண்டு என்று தன்னையே மறந்து பாடிக்கொண்டிருந்தாள். அவளுடைய தேனினுமினிய குரல் கேட்டு ரகுராமன் அங்கு வந்துவிட்டான். அவன் அங்கே வந்ததை அறியாத பானுமதி, 'மத்தளம் கொட்ட வரிசங்கும் நின்றூத...' என்ற பாடலைப் பாடிக்கொண்டிருந்தாள். அந்தப் பாடலைக்கேட்டு ரசித்துக்கொண்டு நின்ற ரகுராமன், 'கைத்தலம் பற்றக் கனக் கண்டேன் தோழி நான்' என்று அவள் பாடி முடித்தபோது, தன்னை மறந்தவனுகப் 'பானு' என்றுன்.

ஆயர்பாடிக் கண்ணனே வந்து அவளை அழைத்தது போன்றிருந்தது அந்தக் குரல். அவள் தன்னுணர் வடைந்து, துள்ளி எழுந்து நாணத்தால் முகம் சிவக்க நிலம் நோக்கி நின்றுள்.

'அம்மா! ஆண்டாளே எங்கள் வீட்டுப் பூசை அறைக்குள் வந்துவிட்டாளோ என்று பார்க்கத்தான் ஓடி வந்தேன். ஆனல்...' என்று கூறி அவன் சிரித்தான்.

'ஏன்டா ரகு! பாடிக் கொண்டிருந்த பெண்ணைக் கூப்பிட்டுப் பரிகாசம் செய்கின்றுயா?' என்று கேட்டாள் அன்னபூரணி.

'பானுவுக்கும் பாட வருமா என்று தான்...'

'அட தடிராமா! இப்படித் தான் அவளையும் கேலி செய்து படிக்காமல் செய்தாய். இன்று இந்தப் பெண்ணையும்...' என்று அன்னபூரணி அம்மாள் ஏசிய பொழுது ரகு எதுவும் பேசாமல் திரும்பிவிட்டான்.

'இந்த அறைப் பக்கமே அவன் வருவதில்லை. இன்று வேணும் என்று வந்திருக்கின்றுன். இவனுடைய குழந்தைப்பிள்ளை விளையாட்டு இன்னும் தான் தீர்ந்தபாடில்லை.' என்று முணுமுணுத்தவாறே வீபூதியை எடுத்து நெற்றியில் தடவிக்கொண்டு சமையலறைப் பக்கம் சென்றுள் அன்னபூரணியம்மாள்.

'ஏன் பானு, உன்னுடைய பாட்டைக் கேட்டு அண்ணுவே ஓடிவந்திட்டான். பார்த்தியா?' என்றுள் பாரதி.

நமது தொடர்கதை

'பாரதி அவர் அம்மா ஏசியதால் கோபித்திருப்பாரோ?'

'அண்ணு? அவனுக்குக் கோபமே வராது. அப்படி வந்தால் அது ... ஆனல் உன்னிடம் கோவிக்க மாட்டான்.

'கேலி செய்கிருயா பாரதி?'

'பானு! அவன் அறையில் தானிருப்பான். போய்ப்பாரேன்.'

'நான் தனியே போகமாட்டேன்.'

'நானும் வரவா?'

'வாவேன் பாரதி.'

'பானு! ஏனடி இவ்வளவு பயந்தாங் கொள்ளியா நீ? போ பானு.' என்று கூறி விட்டு அவளும் சென்று விட்டாள்.

ரகுராமனுடைய அறையைப் பாரதி நெருங்கி விட்டாளாயினும் உள்ளே போகும் துணிவு அவளுக்கு இருக்கவில்லை. வாசலில் நின்று எட்டிப் பார்த்தாள். ரகுராமன் அலுமாரியில் எதையோ தேடிக்கொண்டிருந்ததால், அவன் பானுவைப் பார்க்கவில்லை. 'ஹ்கும்' என்று தொண்டையைக் கனைத்தாள் பானுமதி. திரும்பிப் பார்த்த ரகுராமன் சிரித்துக்கொண்டே 'கச்சேரி முடிந்ததா?' என்றுன்.

'கோபமா ரகு?'

'எனக்கென்ன கோபம்? நான் சும்மாதான் கேட்டேன். உள்ளே வரப் பயமா? ஓ... ஐ ஆம் சொறி பானு. நீ இதுவரை இங்கே வந்ததில்லையல்லவா?. இனியும் நீ விரும்பினல் வரலாம் விரும்பாவிட்டால் விடலாம். உன்னை வற்புறுத்த மாட்டேன்.' என்று கூறிவிட்டு அலுமாரியிலிருந்து ஒரு சிறிய அட்டைப் பெட்டியை எடுத்து மேசைமீது வைத்தான்.

'நீங்கள் மிகவும் அழகாக ஆனல் தந்திரமாகப் பேசுகின்றீர்கள். நீங்கள் ஏதாவது சொல்வீர்களோ என்று பயந்துதான் வெளியே நின்றேன். வேறு ஒன்றும் இல்லை. என்று கூறிக்கொண்டே அறைக்குள் வந்தவள், அந்த அறையிலிருந்தவற்றையெல்லாம் பார்த்துப் பிரமித்து நின்றுள்.

'என்ன பானு! அப்படியே நின்று விட்டாய்?'

இவ்வளவு புத்தகமும் உங்களுடையவை தானு?' என்று புத்தகங்கள் அடுக்கி வைத்த அலுமாரியைச் சுட்டிக் காட்டினுள்.

'இவ்வளவும் கடைக்காரனுடையது. பணம் கொடுத்து வாங்கி வைத்திருக்கிறேன்' என்றுன்.

'உங்கள் அம்மா சொன்னது போல் நீங்கள் ஒரு விளையாட்டுப் பிள்ளை மாதிரி தான் பேசுகிறீர்கள் என்றுள்.'

'அப்படியானல் இனிமேல் தாத்தா மாதிரிப் பேசவா?' என்றுன்.

அவனுடைய வேடிக்கையான பேச்சையே நாள் முழுவதும் கேட்கலாம் போலிருந்தது பானுவுக்கு. இந்தக் கதவு பூட்டியிருக்கே என்று புத்தக அலுமாரியின் கதவை இழுத்து விட்டுக் கூறினுள்,

'கண்ணுடிக் கதவு போட்டிருக்கே. ஏன் தெரியுமா?'

'எனக்கென்ன தெரியும்?'

'சும்மா பார்ப்பவர்கள் தொடாமல் பார்ப்பதற்காக நீ படிக்கப் போறியா பானு?'

'இந்த அறையிலேயே இருந்துவிடலாம் போலிருக்கு. ஏன் ரகு, மர்ம நாவல்கள் கூடப் படிக்கின்றீர்களா?'

'ஆமாம். ஆனல் சிலருடைய புத்தகங்கள்தான் எனக்குப் பிடிக்கும்.' என்று கூறிவிட்டுச் சாவியை எடுத்து அவளிடம் நீட்டினுன்.

'இது ஏன்?'

'நீ விரும்பியபோது வந்து, விரும்பிய புத்தகத்தை எடுத்துக்கொள்' என்றுன்.

'இது என்ன ரகு?' என்று மேசைமீது அவன் வைத்த அட்டைப் பெட்டியைக்காட்டினுள்.

'இதுவா? இது ஒரு 'றிஸ்ட் வாட்ச்' பாத்தியா எவ்வளவு அழகாயிருக்கு?' என்று பெட்டியைத் திறந்து வெளியே எடுத்துக்காட்டினுன். அதைப் பார்த்ததும் பானுவே வியப்படைந்தாள்.

'இதன் விலை நிறைய இருக்குமே ரகு.'

'விலையா? ஆமாம். இதை ஒரு ஆளுக்குப் பரிசளிக்கப் போகிறேன்.'

பானுவின் மனதில் அவன் அதைத் தனக்கே தரப்போகிருன் என்ற நினைவே எழுந்து நின்றது. ஆனல் ரகு அதை மறந்து வேறு என்னவோ எல்லாம் கூறினுன். பானுவின் கையிலிருந்த அந்தக் கைக்கடிகாரத்தை வாங்கிப் பெட்டியில் வைத்து மூடி, தன் சட்டைப்பாக்கட்டில் வைத்துக்கொண்டு 'ஏன் பானு, இன்று ஸ்கூல் இல்லையா?' என்றுன்.

'இல்லையே'

'நல்லது. நான் வெளியே போகவேண்டியிருக்கின்றது. மாலை நாலு மணிக்கு முன்பே வந்துவிடுகின்றேன். இன்று நிச்சயமாக நாம் சினிமாவுக்குப் போகலாம்.' என்று கூறி விட்டுப் புறப்பட்டான்.

'பஸ்ஸிலா போகின்றீர்கள்?' என்று கேட்டாள் பானு.

'ஆமாம்.' என்றவன் பின்பு, 'பானு நான் பஸ்ஸில் போவதாகவா கூறினேன். இன்று ஆபீசுக்குப் போகவில்லை. மிஸ் ரோஸி வருவதாகக் கூறியிருக்கின்றுள். அவள் கார் கொண்டு வருவாள்.' என்று கூறிக் கொண்டே சென்றுன் ரகுராமன்.

ஆத்திரமும், ஏமாற்றமும் நிறைந்த மனத்துடன் அவன் செல்வதையே வெறிக்கப் பார்த்துக்கொண்டு நின்றுள் பானுமதி.

வளரும்

நையாண்டியல்ல:

## மாட்'டின்'

எஸ். வில்வராஜன்.

அம்மா முலையில் அழகு தமிழ்ப்பால் குடித்தால்...
சும்மா இரான் தமிழன் சுதந்திரப்போர் செய்திடுவான்
பம்மாத்துக்காட்டான், பைந்தமிழில் பாசம் வைப்பான்
விம்மி அழுதேங்கும் வீரத்தாய் விலங்கறுப்பான்

பாலைக்கொடுக்காமல் பாழும் மாட்'டின்' வாங்கி
நாளும் கொடுத்து நாசமுறச் செய்யாமல்
சேலைக்குரியவரே! சேய்களுக்குத் தாய்ப்பாலைத்
தாலாட்டுப்பாடித் தமிழ் கலந்து ஊட்டுங்கள்

பிள்ளைக்குப்பால் கொடுத்தால், பிய்ந்து விழாதும்முலைகள்
ஒள்ளம் எனும் தொய்யா, தெழுந்து நிற்கும், அஞ்சாதீர்,
பிள்ளை எழுந்தென்ன? பிசையவா போகிறது?
தெள்ளு தமிழ்த்தாயே! தெருவிலெறி மாட்'டின்'னை

மாட்'டின்' கொடுத்துன் மகனை வளர்க்காதே,
மோட்டுப்பயலாவான், மொழிப்பற்றே அறறிடுவான்
வீட்டுக்குள்ளே சுரக்கும் வீரப்பால் உனக்கிருக்க,
மாட்'டின்' வகைகள் மாசடியோ வீசடியோ!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'தமிழனுக்கு இழைக்கும் அநீதிகளுக்கு ஒருநாள் நீங்கள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்'

## அரசியல் நிர்ணய சபையில் நேமிநாதன் இட்ட சாபம்!

'உள்நாட்டு அமைச்சரவர்கள் இங்கே பேசும்போது, மூன்று முக்கியமான ஆங்கிலச் சொற்களைப் பாவித்தார்கள். ஒன்று Compromise (சமாதானம்) மற்றது We are flexible. (நாங்கள் வளைந்து கொடுக்கக் கூடியவர்கள்) அடுத்ததாக அவர் கூறியது We are here to solve problems. (நாங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத்தான் இங்கே இருக்கிறோம்) அவர் அடுத்தபடியாகக் கூறிய சில வார்த்தைகள், அவர் அச்சொற்களை எவ்வளவு தூரம் உண்மையாக-நேர்மையாகச் சொன்னார் என்று நாங்கள் ஐமிச்சப்படக்கூடிய அளவிற்கு ஆக்கிவிட்டன.

அதாவது, கௌரவ ஹார்காவற்றுறைப் பாராளுமன்ற அங்கத்தவர், தமிழிலே எழுதச் சொல்லிக் கேட்டாராம். அவர் ஆங்கிலம் தெரிந்தவரானபடியால் தாம் அவருக்குத் தமிழிலே எழுதாது ஆங்கிலத்திலே எழுதினாராம்: இதுதானா Compromise?

### மனம் உண்டானால் இடம் உண்டு

சரி, நீங்கள் தானே 'தமிழருக்குத் தமிழிலே எழுதுகிறோம்; அதற்கு ஏற்ற வசதிகள் உண்டு' என்று சொல்லுகிறீர்கள். குழப்பம் பண்ணிக்கொண்டிருக்கிறானே; அவனுக்கு இதை எழுதித் தொலைத்து இந்தப் பிரச்சினையை முடித்து விடுவோம் என்றுவது எண்ணுகிறீர்களா? அந்தப் பிரச்சினையைப் பெருப்பித்துக் கொண்டு போகிறீர்கள் Compromise என்று சொல்லி;

அடுத்தபடியாக என்ன சொல்லியிருக்கிறீர்கள்? 'உங்கள் சட்டம் செல்லுபடியாகாது, தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட விதிகள் செல்லுபடியாகாது; நீங்கள் கோர்ட்டுக்குப் போங்கள்' என்கிறார் அமைச்சர்; இதுதானா Compromise; இதுதானா flexibility? உண்மையில் அது தேவையானது ஒரு திருத்தமென்று நீங்கள் கருதினால், அது நீதிஸ்தலத்திலே செல்லுமா, செல்லாதா என்பதைத்தான் கவனிக்க வேண்டுமா? அதை நடைமுறையிலே நடத்த முடியாதா? மனம் உண்டானால் இடம் உண்டு: ஆனால், அந்த நிலை இல்லை என்பது நீங்கள் சொல்லுவதிலிருந்து வெளிப்படுகிறது.

அதுமட்டுமல்ல, மிக முக்கியமான ஒரு அமைச்சரென்றவகையிலே நான் அவரைக் கேட்பதென்னவென்றால், நீதிமன்றத்திலே செல்லக்கூடிய சட்டங்களையா இன்று நீங்கள் வைத்துச் செயல்படுத்துகிறீர்கள் என்பதுதான். அரசாங்கத்தைக் கொண்டு நடாத்துவதற்காக வேண்டி நீதிமன்றத்திலே செல்லாத எத்தனையோ சட்டங்களை நீங்கள் வைத்து நடத்துகிறீர்கள்; இலங்கையை ஒற்றுமைப்படுத்துவதற்காக வேண்டி நீதியில்லாத ஒரு சட்டத்தை அமுல் நடத்திக் கொள்ளக் கூடாதா? அந்த மனப்பான்மை எங்கிருக்கிறதென்றுதான் நான் உங்களைக் கேட்கின்றேன்.

### இதுதானா நீதிசெலுத்தும் வகை?

இங்கு பேசிய உள்நாட்டு அமைச்சரவர்கள் அனுபவத்திலே மிகுந்தவர். சமாதானமாக எல்லா விடங்களையும் தீர்க்கவேண்டுமென்று தாம் விரும்புவதாகச் சொல்பவர் அவர்கூட, 'உங்களுக்கு இவ்வளவு சலுகைகளையும் சட்டமூலம் தந்துவிட்டோம்; இதை நீங்கள் விரும்பாவிட்டால் இதுவுமே இல்லாத நிலைக்கு நீங்கள் போவீர்கள்' என்று சொல்லுகிறார். நீங்கள் இது ஒரு சரியான சட்டமென்று நினைத்தால் நாம் ஏற்றுக் கொண்டால்தானா தரவேண்டும். இதுதானா நீதிசெலுத்தும் வகை? நீங்கள் அரசாங்கத்தை நடாத்துகின்ற பொழுது ஒரு நீதி இருக்குமென்றால் அந்த நீதியை-சட்டத்தை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றபடியால் அநீதியான சட்டத்தையே கொடுக்கிறோம் என்பதுதானா நீதி? யோசித்துப்



பாருங்கள். இவையெல்லாம் விவாதத்துக்காகக் கதைப்பவை. உண்மையிலே மக்கள் வாழ்க்கைக்குப் பிரயோசனப்படாதவை. நாம் நேர்மையாக வாழவேண்டுமென்றால், இந்த மனப்பான்மையை விட்டெறிய வேண்டும்; Compromise, flexibility என்பதற்குச் சரியான அர்த்தத்துடன் இந்த அரசாங்கம் நடந்தால் எத்தனையோ பிரச்சினைகள் தாமாகவே தீர்க்கப்பட்டுவிடும்.

### அகங்காரம் அழிவையே தரும்

இலங்கை மாதாவை இன்று நாம் எடுத்துக் கொண்டால் அரசியல்வாதிகளால் இந்த மாதா முதுகில் ஏற்பட்ட புண் இந்த பாஷைப் பிரச்சினையாகும். அந்தப் புண்ணை அலங்கரித்து சோடித்து சேலைகட்டி வெளிநாடுகளுக்காக நீங்கள் மறைக்கின்றீர்கள். பழைய சாசனத்தைத் தூக்கிஎறிந்து விட்டோம் புதிய சாசனத்தைக் கொண்டு வருகிறோம் என்று மக்களுக்குக் கூறி இலங்கை மாதாவுக்கு ஆபரணம் போடுகிறீர்கள்: இருந்தும் மாதாவுக்குப் புண் முதுகில் இருக்கத் தான் செய்கிறது; அது நோகத்தான் செய்கின்றது. இந்தப் புண் இருந்து விட்டுப் போகட்டும்; நாம் வெளியில் எப்படியோ சோடித்து வைத்திருப்போம் என்று நீங்கள் நினைத்தால் இந்தப் புண் புற்றுநோயாக மாறும் என்பதைச் சொல்லவிரும்புகிறேன்;

இன்று உங்களிடம் நிறைந்த அதிகாரம் உண்டு. எங்களுக்குச் சுதந்திரம் கிடைத்த காலம் தொடக்கம் எல்லா அரசாங்கங்களும் அரசாங்கத்தை நிறுவமுன் கதிர்காமத்திற்குக் காவடி எடுத்து கடவுள் அருள் பெற்றுத் தான் வருகின்றன. இராவணன் சரித்திரத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். எங்கள் புராணங்களில் இருப்பதை நான் இங்கு சொல்ல விரும்புகிறேன். புராண காலத்தில் கடவுளை வேண்டி கடவுளிடம் இருந்து பலர் சாகாவரம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இந்த வரத்தைப் பெற்றபின் இவர்கள் அட்டூழியமாக நடந்ததால் கடவுளே வந்து இவர்களைச் சாகடிக்க வேண்டிய நிலை வந்தது. அதைத் தான் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன் கடவுளை வேண்டிய நீங்கள் கடவுள் அருளைப் பெற்றீர்கள். கடவுள் உங்களுக்கு நிச்சயமான அருளைத் தந்து நீதியாக நியாயமாக நீங்கள் நடப்பீர்கள் என்று எதிர்பார்க்கின்றார். அந்தப் புராணத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் போல அகங்காரம் தலைகாட்டி நீங்களே நினைத்ததையெல்லாம் செய்யலாம் என்றால் கடவுள் ஒருவர்தான் அதற்கும் பதில் தருவார்.

கே. பி. இரத்னயகா:- 'அடுத்த தேர்தலில்!

### வினை விதைத்தவன் வினை அறுப்பான்!

நேமி:- அடுத்த தேர்தலிலோ அல்லது அதற்கு முன்னரோ எனக்குத் தெரியாது: ஏனெனில் சென்ற வருடம் நீங்கள் பதவிக்கு வந்தபோது உங்களுக்கு இருந்த பெயர் புகழ் என்ன? உங்கள் புகழை ஊர் எல்லாம் கதைத்தது. அப்படி இருந்தும் ஒரு வருட காலத்துக்குள் ஒரு பயங்கர இயக்கம் நடக்கும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அரசாங்கத்திற்கு எதிராக ஒரு பயங்கர இயக்கம் நடந்துவிட்டது.

நான் மிகவும் மனவருத்தத்துடன் சொல்லுகிறேன், நாங்கள் ஒரு சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தொடங்கினால், எங்கள் உரிமைகளை நாங்கள் கேட்டால் எங்களைத் துரோகிகள் என்கிறீர்கள் என்று. துவக்கு எடுத்து உங்களைக் கவிழ்க்க வந்தவர்களைப் பயங்கரவாதிகள் என்று சொல்லுகிறீர்கள்: நீங்கள் இங்கே எங்களைப் பார்த்துச் சிரிக்கலாம், பகிடி பண்ணலாம். இது பகிடிக்குரிய விடயம் அல்ல என்பது காலம்போன பின்னர்தான் தெரியவரும்;

(11ம் பக்கம் பார்க்க)

---

## தமிழின் முதல்,...

(4ம்பக்கத் தொடர்ச்சி)

களைப் பற்றியும் பேசுகிறது: எனவே, 'பலதுறைச் செய்திகளை முறைப்படுத்தித் தருவதே கலைக்களஞ்சியம்' என்னும் இலக்கணத்துக்குப் பொருத்தமாகத் தமிழில் முதன்முதலில் வெளிவந்த நூல் என்னும் சிறப்பு அபிதானசிந்தாமணிக்கே உரியதாகிறது;

அபிதானகோசம் இலக்கியம் என்ற எல்லையைத் தாண்டிக்கலைக்களஞ்சியத்துக்குரிய பொருட்பரப்பில் சிறிதும் படராததால், அதனை உருவாக்கிய காலத்தில் ஒரு கலைக்களஞ்சியமாக அதைப் படைக்கிற எண்ணமே அதன் ஆசிரியருக்கு இருந்திருக்க இடமில்லை: இதற்குமாறாக, அக்காலத்தில் அறியப்பட்டிருந்த துறைகளில் ஒருசிலவற்றையாவது தன்னுள் அடக்கியதன் மூலம், அபிதான சிந்தாமணி, ஓர் இலக்கியப் பொருள் விளக்க அகராதி என்னும் எல்லையைத் தாண்டியதாக அமைந்துள்ளது. அதன் ஆசிரியர், அதன் பொருட்பரப்பைக் குறிக்கும் விதமாக, "இது ஒரு தத்வகலா ரத்னாகாரமாய், மந்திரசாஸ்திரமாயுள்ள அரிய விஷயங்கள் நீங்க மற்றவைகளின் சார சங்கிரகமாம்" என்று முன்னுரையில் எழுதியுள்ளதும் நினைவு கூரத்தக்கது. எனவேதான் —அது, முழுமை பெற்ற கலைக்களஞ்சியமாக இல்லாவிட்டாலும், ("பலதுறைச் செய்திகளைத் தொகுக்க வேண்டும்" என்னும்) கலைக்களஞ்சியஓர்மை உடையதாக முதன் முதலில் வெளி வந்த தமிழ்ப் புத்தகம் என்ற சிறப்பைப் பெறுகிறது. ஆதலினாலேதான், அபிதான சிந்தாமணி காலத்தால் (எட்டு ஆண்டுகள்) பிந்தியதாயினும், அதுவே கலைக்களஞ்சிய ஆக்க ஓர்மையுடன் தமிழில் செய்யப்பட்ட முதல் முயற்சி என்று நான் கருதுறேன்.

## பாரதி எனும்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

இதையே, கம்பரும், "துன்பு உளது எனில் அன்றோ சுகம் உளது" என்று கூறுகிறார்.

இதையே பாரதியாரும் கருத்திற்கொண்டு—ஏகாந்தமான—இன்பமயமான காணி நிலத்தில் வந்து பாடும் குயிலின் கத்தல் அடுத்து வரும் துன்பத்தைக்காட்டும் பொருளாக நிற்கவேணும் என்கிறார். இத்தோடு விட்டாரா கவிஞர்? அதுதான் இல்லை! "சற்றே வந்து காதில் படவேண்டும்" என்று அவர் கேட்ட துன்பச் சூழல் வர வர நெருங்கி வளர்ந்து அதுவே முழுமையாகி விடும் என்ற உண்மை புலனாகவே பாரதியார் பராசக்தியையே "காவலுக்கும்" அழைக்கிறார். இனிமேல் சரி தானே? துன்பம் கலந்த இன்பம்—அந்தத் துன்பம் முழுமையாக அணுகாமல் ஒரு காவல்—! இவையெல்லாம் நிறைந்தவுடன் பாரதியார் தன் நிலைக்கு மீள்கிறார்.

ஆமாம்! ஒரு நிறைந்த நிழலில் நிற்கும் கவிஞர் "என்தன் பாட்டுத்திறத்தாலே இவ் வையத்தைப் பாலித்திடவேணும்" என்கிறார்.

பாரதியாரின் பாடல்கள் எல்லாம் நாட்டு நலனுக்காக அமைந்தவை — தெய்வீகமானவை என்பது உண்மைதான் எனினும், அவரின் இந்த ஒரு கவிதை வரியிலேயே கவிதை முழுவதுமே பராசக்தியின் பரிசுகள் என்பது புலனாகின்றதல்லவா?

"பாரதியார் யார்"? எனக் குழம்புபவர்கள் அவர் ஒரு மகாகவி—மணிக் கவி என்று கொண்டால் அது அவர்களுக்குச் சிறப்பு!

மனோ ரஞ்சிதமாக நிற்கும் பாரதியின் கவிதைகளை—கருத்து மிளிர நாடு பாடிக் கொண்டால் அது தமிழுக்குச் சிறப்பு!

"சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்த்த" பாரதி புகழ் புவியில் ஓங்கி நிரந்தரம் நிலைக்க எங்கள் வாயுற வாழ்த்துவோம்!

"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி வாழிய வாழியவே!"

## சேமமடுகுடியே...

(4 பக்கத் தொடர்ச்சி)

பாடு. ஒருவருடம் பட்டுப் போனதும் உண்டு. சிறுபோக வேளாண்மை இரண்டு மூன்று முறை செய்த நினைவு. பலனையோ பணத்தையோ கண்டதில்லை; குளத்தின் கலிங்கை உயர்த்தித் தரச் சொல்லி ஆயிரக் கணக்கான முறை தந்தை செல்வநாயகம்வரை பல பேர் முறையிட்டு விட்டார்கள். அரசினர் காதில் ஏறவும் இல்லை. பதில் தருவதும் இல்லை. இரண்டு போக வேளாண்மை இல்லாமல் நாம் ஏன் இங்கு இருக்க வேண்டும் என்பது கேள்வி?

அது மட்டுமா? எமது கிராம மக்கள் தங்களுக்குத் தேவையான [illegible] சாமான்கள் எமது கிராமத்திலேயே எடுப்பதென்றால், அது முயல் கொம்பு, ஒரு சங்கக் கடை' அங்கே எல்லாச் சாமான்களும் எடுப்பது சங்கடம், மற்றச் சாமான்கள் எடுக்க வவுனியா செல்ல வேண்டும். அதுவும் சங்கங்களைப் புனரமைப்புச் செய்த பின் தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டம் என்ற மாதிரிக் கூட்டுறவு அதிகாரியின் திருவிளையாடலோ அதுபெரிய கதை. ஐயகோ! அரசினரே! ஆளவந்தோரே! எங்கள் கிராமத்து நிலையைப் பார்த்தீர்களா? இதுவரை வந்து பார்க்காவிட்டால் வந்து பாருங்கள். இப்படி எத்தனையோ சோக வரலாறுகள், சொல்லொணாத் துன்பங்கள், ஏட்டில் எழுத முடியாத இன்னல்கள். தயவு செய்து அரசினர் மேற் சொன்ன வேலைகளைக் கருணையுடன் செய்வார்களா? நடவடிக்கைஎடுப்பார்களா? அந்த நாளும் எந்த நாளோ?

## தமிழரசு கட்சி தொண்டருக்கு புதிய பதவி!



மூதூரைச் சேர்ந்த டாக்டர். ஏ. அந்தனி ரேச் டீ. வாஸ் அவர்கள் மூதூர் அரசினர் ஆஸ்பத்திரியின் உத்தியோகப்பற்றற்ற உத்தியோகத்தனை சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தமிழரசுப் பொதுச்சபை நிர்வாகசபை, தமிழரசு வாலிப முன்னணியின் பொதுச்சபை-நிர்வாக சபை உறுப்பினராகவும் மூதூர் இளைஞர் சமூகசேவா சங்கத்தின் தலைவராகவும், ஆகிய இவர் சித்தாயுர்வேத வைத்திய சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினராகவும் கடமை ஆற்றி வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலைத் துறைமுக நிர்வாகத்திற்கு சிங்கள உயர் அதிகாரிகளை கொண்டு வந்து குவிப்பதன் நோக்கமென்ன?"

"திருகோணமலைத் துறைமுகத்தைத் தேசிய மயமாக்கிக் கூட்டுத்தாபன நிர்வாகம் ஏற்பட்ட காலம் முதல் திருகோணமலைத் துறைமுகத் தொழிலாளர்களது உள்ளத்தில் பீதியையும், கசப்பையும் ஏற்படுத்தும் படியாக உயர் அதிகாரிகளின் நியமனம் காலத்துக்கு காலம் மாறுபாடுகளெதுவும் இன்றி நடைபெற்றுக் கொண்டே வந்திருக்கின்றது.

கடந்த காலங்களில் இந் நியமனங்கள் நடைபெற்ற போதிலும் அவ்வேளைகளில், கூட்டுததாபனத்தின் ஆரம்ப காலக் கட்டமாதலால் தொழில் முறைகளை நெறிப்படுத்துவதற்கு மேற்படி முயற்சி கையாளப்படுவதாக எண்ணி நாம் மௌனம் சாதித்தோம்.

ஆனல், தொட்டகுறை விட்டகுறையாகத் தொடர்ந்தும் கொழும்பில் இருந்தே சிங்கள உயர் அதிகாரிகள் திருகோணமலைத் துறைமுகத்திற்கு இறக்குமதி செய்யப்படுவது வேதனைதரத்தக்க செயல்களாகும்.

75% மானேர் தொழிலாளர் தரத்திலும 99% மானேர் தொழிலாளர் தரமற்ற பிரிவிலும் தமிழ்ப் பேசும் ஊழியர்களாகக் கடமையாற்றும் இத்துறைமுகத்தில் தனிச் சிங்கள உயர் அதிகாரிகளைக் கொண்டுவந்து நிரப்புவது நிர்வாகத்துறைக்கும், கூட்டுத்தாபனத்தின் தொழில் முறைக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையும் என்பதை அறியக்கூடியதாக இருக்கும் இது விடயத்தில் மாற்று நடவடிக்கைகள் எதையும் கையாளாது தொடர்ந்தும் திருகோணமலைத் துறைமுகத்திற்குச் சிங்கள உயர் அதிகாரிகளை கொழும்பிலிருந்தே கொண்டுவந்து குவிப்பதன் மூலம் இத்துறைமுகத்தின் நிர்வாகத்தோடு, இத்துறைமுகத்தையும் மெல்ல மெல்லச் சிங்களமயமாக்குவதற்குத் தாங்கள் திட்டமிட்டு எடுக்கின்ற விரும்பத்தகாத ஒரு நடவடிக்கையாகவே தொழிலாளரோடு நாமும் கருத இடமேற்படுகின்றது.

வகுப்பு வாதத்திற்கு இடம் கொடுக்காத நிலையில் கடமையாற்றும் தொழிலாளர்களது உள்ளத்தில் தங்களது நடவடிக்கை தவருன கருத்தினைத் தீனி போட்டு வளர்ப்பதன் மூலம் விரும்பத்தகாத விளைவினை ஏற்படுத்தக் காலாக அமைந்து விடுமோ என அஞ்சுவதோடு மேற்படிச் சூழ்நிலையைக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் கடைப்பிடிக்குமாளுல் தொழிலாளர்களின் கசப்பையும், வெறுப்பையும் கூட்டுத்தாபனம் சம்பாதிக்க நேரிடும் என்பதையும் வலியுறுத்துகின்றேன்.

தொழிலாளர்களின் நல்லெண்ணத்தையும் பயமின்மையையும் வளர்க்க நினைத்தால் கூட்டுத்தாபனத்தில் வகுப்பு வாதத்திற்கு இடம் அளிக்கக்கூடாது எனக் கருதினுல், தமிழர், சிங்களவர் ஒற்றுமை தழைத்திட வேண்டும் என்ற அவாவினுல் கூட்டுத்தாபனம் இத்துறைமுகத்திற்குச் சிங்களம் தெரிந்த தமிழ் ஊழியர்களை அனுப்பி வைக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

—இவ்வாறு இலங்கை துறைமுக தொழிலாளர் கழக திருகோணமலைக் கிளைச் செயலாளர் திரு. செ. ஈழத்துநாதன் துறைமுகக் கூட்டுத்தாபனத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் சுட்டிக் காட்டியுள்ளார்.

## பதியுதீன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"ஆனல் எங்களுக்கிருக்கும் ஆத்திரமெல்லாம் தமிழ் மக்களை கல்வியமைச்சர் திட்டமிட்டு புறக்கணித்து ஒதுக்கிவருகிருர் என்பது தான். கல்வியமைச்சரின் நடவடிக்கைகள் பல தமிழினத்துக்கு வேட்டு வைப்பதாகவே யிருக்கின்றன. இதைச் சகித்துக்கொண்டு நாம்இருக்கமுடியாது. தமிழ் மக்களுக்கு கல்வித்துறையில் எவ்விதமாக அநீதி இழைக்கப்பட்டுவருகிறதுஎன்பதற்கு இதோ சில உதாரணங்கள்.

(1) பல்கலைக்கழக பிரவேசத்தில்—தரப்படுத்தல் எனும் போர்வையின் கீழ் இனப்படுத்தல் நடைபெற்றது. தகுதியும் திறமையும் படைத்த தமிழ் மாணவர்கள் பலர், தமிழ் மாணவர்களாக பிறந்துவிட்ட ஒரே காரணத்துக்காக பல்கலைக் கழகத்தில் நுழையவிடாது தடுக்கப்பட்டனர். அதே நேரத்தில் தமிழ் மாணவர்களிலும் புள்ளிகள் குறைய எடுத்த ஏனைய இனமாணவர்களுக்கு பல்கலைக்கழக பிரவேச அனுமதி கொடுக்கப் பட்டது. இந்த இனப்படுத்தல் கொள்கை மேலும் தொடருமா இவ்வளவுடன் கைவிடப்படுமா என்பதை அமைச்சர் தெளிவு படுத்த வேண்டும்.

(2) பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வில், கல்வியில் பின்தங்கியுள்ள கிழக்குமாகாணம் புறக்கணிக்கப்பட்டது. வட பகுதியிலும் தகுதியுடைய பலர் நிராகரிக்கப் பட்டனர். இந்நியமனங்களில் ஊழலும், அரசியல் தலையீடும், முறைகேடுகளும்நடைபெற்றன. இதுபற்றிநாடாளுமன்றத்தில் தெளிவாக கூறியுள்ளோம்.

(3) 55க்கும் 60க்குமிடைப்பட்ட வயதுடைய அனுபவமும் ஆற்றலும் மிக்க தமிழாசிரியாகள் ஏறத்தாழ ஆயிரம் பேர் வரை கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டனர். இந்த ஆயிரம் பேருக்கு பதிலாக ஏறத்தாழ 600 பேரே புதிதாக நியமனம் செய்யப் பட்டனா. இப்படி செய்ததன் மூலம் தமிழாசிரியர்களின் வேலைவாய்ப்பு குறைக்கப்பட்டதுடன் ஏராளமான தமிழ்ப்பாடசாலைகளில் ஆசிரியர் பற்ருக்குறைவும் ஏற்பட்டுள்ளது.

(4) வடக்குக்கு ஒன்றும், கிழக்குக்கு ஒன்றுமாக இரு பல்கலைக்கழகங்கள் தரப போகிருேம் எனறு கூறினர். இறுதியில ஒன்றுகூட இல்லையென்ருகிவிட்டது!. யாழ்ப்பாணத்திலிருந்த கனிஷ்ட பல்கலைக்கழகமும் மூடப் பட்டாயிறறு!

(5) யாழ்ப்பாணத்துக்கு தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றுகூட அமைத்து தரப் படவில்லை. அதே சமயம் ஏனைய தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் இன அடிப் படையிலேயே மாணவர்கள் சேர்க்கப்படுகிருர்கள்.

(6) தோட்டப் பாடசாலைகள் முழுவதும் தேசிய மயமாக்கப்படவில்லை.

(7) ஏனைய மதத்தினரை பெரும்பான்மையாகக் கொண்ட தமிழ் பாடசாலைகளுக்கு, இஸ்லாமிய ஆசிரியர்களையும் இஸ்லாமிய தலைமை ஆசிரியர்களையும், நியமனம் செய்வதன் மூலம் தமிழ் பேசும் மக்களிடையே மதப் பூசலை உருவாக்க கல்வியமைச்சு முயலுகிறது.

(8) அண்மையில் நடந்த தராதரமற்ற ஆசிரியர் தேர்வில் தகுதியும், திறமையும் புறக்கணிப்பட்டதுடன், விகிதாசாரப்படி கூட போதிய தமிழர்கள் தெரிவு செய்யப் படவில்லை.

(9) கல்வியமைச்சு தொடர்ந்து தமிழ்ப் புறக்கணிப்பில் ஈடுபட்டுவருகிறது. இவ்வமைச்சிலிருந்து தமிழ் பா. உ.க்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும் மற்றும் தமிழ் மக்களுக்கும் அனுப்பப்படும் சுற்றறிக்கைகள் பலவற்றில் தமிழ் இடம் பெறுவதில்லை: அண்மையில் தமிழர் பூமியான மட்டக்களப்பில் நடைபெற்றபாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி அழைப்பிதழிலேயே தமிழைபுறக்கணித்து விட்டிருக்கிறது கல்வித் திணைக்களம்.

(10) கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தமிழ்ப் பிரிவுக்கு பொறுப்பாக உதவி ஆணையாளராக திரு. ஆ. வி. மயில்வாகனம் கடமையாற்றிவந்தார். இவர் ஓய்வு பெற்று பலமாதங்களாகியும் இதுவரை வேருெருவர் அப்பதவிக்கு நியமிக்கப்படவில்லை. இப்பதவியை நிரப்பும்படி ஊர்காவற்றுறை பா. உ. பலமுறை கேட்டும் அக் கோரிக்கை செவிடன்காதில் ஊதிய சங்காயிற்று.

இத்திணைக்களத்தின் தமிழ் கண்காணிப்பாளர் பதவிக்கு பல்கலைக்கழகப் பட்டங்கள் பெற்ற தகுதயுடைய தமிழ் அதிகாரிகள் பலர் இருந்தும் அவர்களில் ஒருவரை நியமிக்காமல் தகுதியான உயர்பட்டங்கள் எதுவுமற்ற பெண்மணி ஒருவரை நியமித்துள்ளதையிட்டு அப்பகுதி உத்தியோகத்தர்கள் கொதிப் படைந்துள்ளனர்.

"இப்படி தமிழ்மக்களுக்கு கல்வியமைச்சர் இழைத்து வரும் அநீதிகள் ஏராளம். இந்த அநீதிகள் களை...

## தி. மு. க. ஆட்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புகுந்த வீட்டில் நல்ல முறையில் பெண் வாழலாம். ஆனல் தாய் வீட்டிற்கு வருகிற போது — அங்கே வறுமைஇருந்தால் அதையும் ஏற்று ஒன்றி வாழ்வதுதான் முறை! அங்கு வாழ்வது போல் இங்கும் வாழ்வேன் எனக்கூறுவது சரியா என்று எண்ணி பார்த்திட வேண்டும்!

வெளி நாட்டில் வாழ்ந்த வாழ்வுதமிழகத்தில்கிடைக்க வேண்டும் என்று எதிர் பார்க்கிருர்கள். அதைத் தவறுஎன்றுநான்கூறவில்லை. எங்களுக்கும் அப்படிப்பட்ட வாழ்வு தர வேண்டும் என்று தான் ஆசை. ஆனல் இருக்கின்ற சூழ்நிலை — நிதி நிலை ஆகியவற்றையும் அவர்கள் கவனித்துப்பார்த்திடவேண்டும்!

—இவ்வாறு அமைச்சர் சத்தியவாணி முத்து கூறியுள்ளார். எனவே இந்தியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்கு முன்னர் இதையெல்லாம் மலையகத்தமிழர்கள் தீர ஆலோசித்திட வேண்டும்.

## 'தமிழர் இரண்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

துறையில் முன்னேற ஆங்கிலம் என்ற விளக்கு நமக்கு அவசியம்;

தமிழ்மொழி மூலம் அரசாங்க சேவைகளில் சேருபவர்கள் மட்டும், அப்படிச் சேர்ந்த பின்னர் தமக்குத் தரப்படும் கால எல்லைக்குள் அரசாங்க மொழியான சிங்களத்தைத் தேவையான அளவுக்குக் கற்றுக் கொள்ளலாம். இப்படிச் செய்வது கூட விருப்பத்தின் அல்ல—நிர்ப்பந்தத்தின் பேரில்!"

—இவ்வாறு தமிழரசுத் தந்தை தெரிவித்தார்.

## கம்யூனிஸ்டு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் தரும் 'மரியாதையை' பார்த்தீர்களா?

இது ஒரு புறமிருக்க, கம்யூனிஸ்ட் கட்சியின் இப்புதிய முடிவின் விளைவாகத் தமிழ் பகுதியிலுள்ள கம்யூனிஸ்ட்டுகளின் எதிர்காலநிலையென்ன என்பதும் கேள்விக்குரியதாகிறது!

யப்படாவிட்டால் அமைச்சரது விஜயத்தை நாம் தீவிரமாக பகிஷ்கரிக்காமல் வேறு என்ன செய்ய முடியும்?"

—இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## எதிர்பாராத...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

சேலையையும் அறுத்துக் கொண்டு ஓடினுர்கள். அன்றைய தினம் குழந்தையாக இருந்தநான் கத்தியிருந்தால் அழுதிருந்தால் அப்போதே என்னைமாய்த்திருப்பார்கள். அப்படிச் சிசுவிலிருந்தே பயங்கர சோதனைகளைச் சந்தித்தவன் நான்.

### கல்லறையில் எழுத வேண்டியது

என்னுடைய வாழ்நாளில் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்தச் சில ஆண்டுகளில் நாட்டு மக்களுக்குத் தேவையான பல நல்ல காரியங்களைச் செய்து முடித்திருக்கிறேன் என்று என்னைப் பற்றி முத்து குறிப்பிட்டார்கள். முழுமையாக செய்ய முடியவில்லை என்ற உணர்வு இருந்தாலும் என்னுல் முடிந்த அளவுக்கு நல்ல காரியங்களைச் செய்திருக்கிறேன்.

இப்படிப்பட்ட நேரத்தில் எனக்கு எதிர்பாராத முடிவு ஏற்படுமானுல் என்னுடை கல்லறையில் என்ன எழுதுவதென்று இப்பொழுதே சொல்லிவிடுகிறேன்.

இந்த தமிழ் மண்ணுக்காக —தமிழ் மொழிக்காக-தமிழ் நாட்டோர் நலத்திற்காக எவ்வளவோ செய்து முடிக்க எண்ணி இருந்தேன்.

திடீரென்று ஓய்வு பெறப் போய்விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள் என்றுதான் எனது கல்லறையில் எழுத வேண்டும்.

## தமிழா...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

என்றெமதன்னை கை
விலங்குகள் போகும்!
என்றெமதின்னல்கள்தீர்ந்து
பொய்யாகும்?"

என்று குமுறிக்கேட்டிடும் என்னரும் தமிழா, பாரதி பாடல்களைப் படி! படிக்கப் படிக்க உனக்கு விடுதலை ஆவேசம் அதிகரிக்கும்; விடுதலை உணர்வு பீறிட்டெழுந்து விட்டால், தமிழன்னையின் கைவிலங்குகள் தூள் தூளாகும்! தமிழ்க் குலம் அப்போதுதான் தலையெடுக்கும்! பாரதி கண்ட தமிழகம் ஈழத்தில் உருவாகும்! அக் காலம் காண இடைவிடாது உழைப்போம்!

## தமிழனுக்கு இழைக்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

கடைசியாக நான் மூன்று முக்கியமான பழமொழிகளைச் சொல்லி எனது உரையை முடிக்க விரும்புகின்றேன். அதாவது, 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றையது, அரசன் தான் அரசு நடத்தும் போது எதையும் செய்துவிட்டுப் போகலாம்; ஆனல் 'அரசன் அன்று அறுப்பான், தெய்வம் நின்று அறுக்கும்' என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. அடுத்தது, 'அழிவு, அழிவுக்கே வழி' என்பதாகும்.

## 'மொழி எங்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டாரே! யாருக்காக?

பஞ்சுமெத்தையில் துயில் கொள்ள வேண்டிய எமது செம்மல், கொடுஞ்சிறையில் வதைபட்டாரே!

யாருக்காக?

எல்லாம் எமக்காக! தமிழ் மொழிக்காக! எமது கலை கலாசாரம், பிரதேசம் ஆகியன பேணிப் பாதுகாக்கப் பட வேண்டும் என்பதற்காக!

அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டுமானுல், அவர் அரைகுறையாக விட்டுச் சென்ற செயற்திட்டங்களையும், அவர் பின்பற்றிய கொள்கைகளையும் நிறைவுசெய்து முடிப்பதேயாகும். இதற்கு அண்ணன் கோவை மகேசன் அவர்கள் கூறியிருப்பது போல் எம்மத்தியில் இருந்து நாகநாதன்கள் தோன்றவேண்டும்.

"பணத்தைப் பூட்டி வைப்பவனும், படிப்பைப் பயன் படுத்தாதவனும் எதற்கும் பயனற்றவர்"

குலிஸ்தான்.

மில்க்வைற் நீல சோப், பார் சோப், சலவைப் பவுடர் ஆகியவற்றின் பாவித்த மேலுறைகளை சேகரித்து அனுப்பி அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**
**த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3வது ஜனத்திரள் நிறைந்த வாரமாக காட்சியளிக்கின்றது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) | வின்சர் (யாழ்நகர்) | இம்பீரியல் (மட்டு நகர்)


ஜெமினிகணேஷன், (இரு வேடங்களில்) கே. ஆர். விஜயா

பி. எஸ். வீரப்பா, நாகேஷ், நிர்மலா, - மற்றும் பலர் நடித்த -

கதை-திரைக்கதை-டைரக்‌ஷன் தாதா மிராசி

# சங்கமம்

(ஈஸ்ட்மன் கலர்)



டைரக்‌ஷன் A. C. திருலோகசந்தர்

# 4வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் — பிளாசா (கொழும்பு)

லிடோ — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மூன்று மாறுபட்ட வேடங்களில் நடித்து ஆஸ்கார் பரிசுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்ட முதல் தமிழ்ச் சித்திரம். தென்னகத் திரைகளில் மாபெரும் சாதனையை நிலை நாட்டியது.


சிவாஜிகணேசன் ஜெயலலிதா

நம்பியார், நாகேஷ், மற்றும் பலர் நடித்த சாந்தி பிலிம்ஸ்

# தெய்வ மகன்

விரைவில் - சிலோன் என்டர்டெயின்மன்ட் திரைகளில் எதிர்பாருங்கள்

சென்ட்ரல் (மருதானை)



ஜெமினிகணேசன்
ஜெய்சங்கர் லட்சுமி
நாகேஷ் விஜயலலிதா
ஸ்ரீகாந்த் மனோரமா

—நடித்த—

# நாற்றுக்கு நூறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1971-ம் வருடம் புரட்டாதி மாதம் 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் சோவை மகேசன்